பக்கங்கள் : பதினான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 26 திங்கட்கிழமை (11-08-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:256

## படைகளை விட்டு அதிகமானோர் சமாதான காலத்திலேயே ஓட்டம்!

### புள்ளி விவரங்கள் தரும் திடுக்கிடும் தகவல்

கொழும்பு,ஓக.11

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையில் யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த இந்த ஒன்றரை வருட காலத்தில் சுமார் 10 ஆயிரம் பேர் முப்படைகளையும் விட்டு ஓடியுள்ளனர்.

யுத்த காலத்தை விட சமாதான காலத்தில்தான் அரச படைகளை விட்டு ஓடுவோர் எண்ணிக்கை அதிகம்.

அதேபோன்று படைக்கு ஆள் திரட்ட பல்வேறு முயற்சிகளும் பிரசாரங்களும் எடுக்கப்பட்டாலும், யுத்த காலத்தை விட தற்போதைய சமாதான காலத்தில்தான் அரச படைகளில் சேர்வதற்கு இளைஞர்கள் அதிகம் பின்னடிக்கின்றார்கள்.

இத்தகவல்களை இராணுவ ஆய்வாளர் ஒருவர் வெளியிட்டிருக்கின்றார்.

இராணுவத்திற்கு ஆள் திரட்டும் மற்றொரு நடவடிக்கையை இலங்கை இராணுவம் அடுத்த வாரம் ஆரம்பிக்க இருக்கும் பின்னணியில், இராணுவத்தில் சேர்வோர், படைகளை விட்டு ஓடுவோர் ஆகியவை பற்றிய புள்ளி விவரத் தகவல்களை அந்த ஆய்வாளர் அம்பலப்படுத்தி இருக்கின்றார்.

அடுத்த வாரம் ஐயாயிரம் பேரை

(14ஆம் பக்கம் பார்க்க)

## குரங்கு பாஞ்சான் முகாம் பகுதியில் வேவு விமானம்

கொழும்பு,ஓக.11

விடுதலைப் புலிகளின் குரங்கு பாஞ்சான் முகாம் பிரதேசத்தில் விமானப்படையின் ஆளில்லாத வேவு விமானம் ஒன்று தாழப்பறந்து நோட்டமிட்டது என்று செய்தியொன்று கூறுகின்றது.

குரங்குபாஞ்சான் முகாம் அமைக்கப்பட்ட சில தினங்களின் பின்னரே இது நடைபெற்றிருக்கின்றது.

தரையிலுள்ள இராணுவ நிலைகளை வேவு விமானத்தின் 'கமெராக்கள்' உற்றுநோக்கத் தொடங்கிய அதேவேளை, தரைக்கட்டுப்பாட்டாளர்கள் வானொலி இடைமறிப்

(13ஆம் பக்கம் பார்க்க)

### இடைக்கால நிர்வாகசபை பற்றிய வரைவுக்கு

# புலிகள் தரப்பு திருத்தங்கள் தயார்; சட்ட ஆலோசனைக்கு காத்திருப்பு!

### தேசிய எழுச்சி பேரவைக் கூட்டத்தில் தமிழ்ச்செல்வன் தகவல்



கிளிநொச்சி,ஓகஸ்ட்11

**இடைக்கால நிர்வாகம் தொடர்பாக அரசு முன் வைத்துள்ள வரைவுக்கு புலிகள் சமர்ப்பிக்கவிருக்கும் ஆலோசனைகள் (திருத்தங்கள்) விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதனை இறுதி செய்வதற்காக சர்வதேச சட்ட நிபுணர்கள் மற்றும் சர்வதேசதுறை சார் நிபுணர்களை ஒன்றிணைத்து கலந்துரையாடல்களை நடத்த உள்ளோம்.**

**இறுதி செய்யப்பட்டு எமது தரப்பினால் முன்வைக்கப்படும் யோசனைகளை அரசு ஏற்றுக்கொண்டு சமாதான வழிக்கு வருமானால் மீண்டும் பேச்சுக்களைத் தொடங்க நாம் தயாராக இருக்கின்றோம்.**

**- இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.**

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ் மாவட்ட - கோட்டப் பிரதேச, கிராமிய கிளைகளின் - பிரதிநிதிகள் சுமார் 3,000 பேர் கலந்துகொண்ட கூட்டம் நேற்று பளை மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. அங்கு சிறப்புரையாற்றிய சமயமே தமிழ்ச்செல்வன் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான வழியில், பேச்சு மூலம் தமிழ்மக்களுக்கான இறுதித் தீர்வை வழங்கும் அரசியல் சிந்தனையோ அதற்கான அரசியல் பலமோ தென்னிலங்கை

(14ஆம் பக்கம் பார்க்க)






பளையில் நேற்று இடம்பெற்ற தேசிய எழுச்சிப் பேரவை மாநாட்டு மேடையில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் உட்பட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் மாநாட்டில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் காணலாம். *(படங்கள்: அலுவலக படப்பிடிப்பாளர்)*

### நேற்றைய யாழ்ப்பாண விஜயத்தின் போது

## யாழ்.செயலகம் செல்வதை தவிர்த்தார் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

யாழ்ப்பாணம்,ஓக.11

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தலைமையிலான குழுவினர் யாழ். செயலகத்துக்கு வருவதாக இருந்த போதும் திடீரென அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

யாழ்.செயலகத்தின் முன்பாக அமைச்சரின் வருகையை எதிர்பார்த்துக் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பொதுமக்கள் கூடியிருந்தனர். அங்கு தனது விஜயத்துக்கு ஏதாவது எதிர்ப்புத் தெரிவிக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே அமைச்சரின் செயலக விஜயம் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், செயலகம் முன்பாகக் கூடியிருந்த காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணியைச் சேர்ந்தவர்கள் அமைச்சரைச் சந்தித்து மகஜர் கையளிப்பதற்கே நின்றதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும், செயலக வாயிலின் குறுக்கே அவர்களின் சங்கப் பெயர் எழுதப்பட்ட பதாகை கட்டப்பட்டிருந்தது.

இவர்களுடன், வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்

(14ஆம் பக்கம் பார்க்க)

### புலனாய்வு நடவடிக்கை தீவிரம்

யாழ்ப்பாணம்,ஓக.11

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்ததையொட்டி இங்குள்ள புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் மிகத் தீவிரக் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த (14ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிற்கென தனியான தளபதி; இராணுவத்தில் புதியதொரு பதவி

கொழும்பு,ஓக.11

'பாதுகாப்புப் படைகளின் கிழக்குத் தளபதி' என்ற புதிய பதவி ஒன்றை உருவாக்கியுள்ள இராணுவத் தலைமையகம், அப்பதவிக்கு மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராச்சியை கடந்த வெள்ளிக்கிழமை நியமித்திருக்கின்றது.

'வடக்குப் படைகளின் தளபதி' என்ற பதவி போன்று கிழக்கிலும் புதிய பதவி உருவாக்கப்பட்டிருக்கின்

(13ஆம் பக்கம் பார்க்க)



# பொருளாதாரத் திட்டங்கள் குறித்து இன்று சீனாவில் பிரதமர் ரணில் முக்கிய பேச்சு!

- பெய்ஜிங்கிலிருந்து ஞா.குகநாதன் -

பெய்ஜிங்,ஓக.11

சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சி தொடர்பான பேச்சுக்களை இன்று நடத்தவுள்ளார்.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள எக்ஸ்மன் தீவுகளில் நேற்றுமுன்தினம் தங்கியிருந்த பிரதமர், அங்கு நகராதிபதியைச் சந்தித்துப் பேசினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்ட பிரதமர் நேற்று (ஞாயிறு) மாலை 5.10 மணிக்கு பெய்ஜிங் விமான நிலையத்தில் வந்திறங்கினார். பிரதமரை சீனப் பிரதி வெளிவிவகார அமைச்சா வெங்கீ வரவேற்றார். இலங்கைப் பிரதமருக்கு பெய்ஜிங்கில் குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

சீன அதிகாரிகளும் சீனாவில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளும் விமான நிலையத்தில் பிரதமரை வரவேற்கக் கூடியிருந்தனர்.

அங்கிருந்து தியோதி (DIAOY-UTAI) என்ற அரச விருந்தினர் விடுதிக்கு பிரதமர் அழைத்து வரப்பட்டார்.

இந்த விடுதி, சீன அரசினால் உலகத் தலைவர்களை வரவேற்று தங்க வைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு வலயம் போன்று பெருத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இந்த விடுதியில் செய்யப்பட்டுள்ளன.

அழகுற அமைக்கப்பட்ட இந்த விடுதி, நீர்த்தடாகம் ஒன்றின் மத்தியில் கண்கவர் வர்ண மின்குமிழ்களின் ஜொலிப்பில் இரவில் இந்திரலோகப் பிரதேசம் போல் காட்சியளிக்கின்றது.

பிரதமர் தங்குமிடம் மட்டுமன்றி, பிரதமர் பங்குகொள்ளும் நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ள இலங்கைத் தூதரகம், கெரி நிலையம், கிரேட் ஹோல் ஆகிய பகுதிகள் யாவும் மின் வெளிச்சம் பொருத்தப்பட்டு அழகுறக் காட்சி அளிக்கின்றன.

பிரதமர் இன்று காலை 9.30 மணிக்கு கெரி சென்ரரில் சீன வர்த்தக நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்திக்கிறார். சீன வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர்.

இலங்கையில், சீனா மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதாரத் திட்டங்கள் ஆகியவை குறித்து அவர்கள் இன்று பிரதமருடன் ஆராய்வார்கள். அவர்கள் பிரதமருக்கு இன்று காலை விருந்தளித்துக் கௌரவிக்கவும் உள்ளனர்.

அதைத் தொடர்ந்து கெரி சென்ரர் ஹோட்டலில் முற்பகல் 10.45 மணிக்கு ஸ்ரீலங்கா - சீன வர்த்தக, முதலீடு, உல்லாசப் பயணத்துறை முன்னேற்றம் தொடர்பான மாநாடு ஆரம்பமாகும்.

இந்த மாநாட்டில் இலங்கை வர்த்தக சபை நிபுணர்களும், சீனத்தொழில் நுட்ப நிபுணர்களும் கலந்துகொள்வர். சீன வர்த்தக சம்மேளன பிரதிநிதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இந்த மாநாட்டில் கௌரவிப்பர். சம்மேளனத்தின் விருந்தினர் புத்தகத்தில் பிரதமர் கையொப்பம் இடுவார்.

சம்மேளனத்தின் தலைவர் வான் ஜிவ்ஜி வரவேற்புரை நிகழ்த்தியபின் சீனாவின் வர்த்தகத்துறை அமைச்சர் யூஜு குவன்ஸ்ஹோ உரையாற்றுவார். அதன்பின் பிரதமர் முக்கிய உரை ஒன்றை அங்கு நிகழ்த்துவார்.

இன்று மாலை 5 மணிக்கு கிறேட் ஹோல் பிரதேச மக்களைப் பிரதமர் சந்தித்துக் கலந்துரையாடுவார். பின்னர் ஹோபி மண்டபத்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் நினைவுச் சதுக்கத்தில் உள்ள புத்தகத்தில் பிரதமர் கையொப்பம் இடுவார்.

பிரதமருடன் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் சஜித் பிரேமதாச ஆகியோரும் சீனா வந்துள்ளனர்.

நேற்றிரவு இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்ற இராப்போசனத்தில் அவர்கள் அனைவரும் பங்குபற்றினர்.

(ம-3)



சுழிபுரம் மேற்கு சவுக்கடிக்கடலில் வைத்து நேற்றுமுன்தினம் அப்பகுதி மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 4 பேரையும், படத்தில் காணலாம். (படம்: வட்டுக்கோட்டைச் செய்தியாளர்)

# கைதான இந்திய மீனவரில் மூவருக்கு விளக்கமறியல்!

சுழிபுரம் கடலில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களில், படகுகளின் தலைவர்களான மூவரை விளக்க மறியலில் வைக்குமாறும், ஏனையோரை விடுவிக்குமாறும் மல்லாகம் நீதிமன்ற நீதிபதி திருமதி இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார் .

நேற்றுமுன்தினம் மூன்று இழுவை படகுகளில் வந்து சுழிபுரம் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களில் நால்வரை அப்பகுதிப் பொதுமக்கள் பிடித்துப் பின்னர் பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்

ஏனைய எட்டுப்பேரையும் இரு படகுகளையும் கடற்படையினர் பிடித்து பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

இவர்கள் 8 பேரும் மல்லாகம் நீதிமன்றில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் பயணித்த மூன்று படகுகளையும் ஓட்டி வந்த மாலுமிகளில் தங்கவேலு இரும்பன் என்பவரை எதிர்வரும் 19ஆம் திகதி வரையிலும், பிரபு, கிருஸ்ணராசா ஆகியோரை எதிர்வரும் 22 ஆம் திகதி வரையிலும் விளக்க மறியலில் வைக்குமாறும் -

ஏனையோரை விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்களை இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைப்பதற்கு இலங்கைக் கடற்படையினர் முயற்சி எடுத்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.




யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவை சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக யாழ். செயலக வாயில் முன்பாக நேற்றுக் கூடியிருந்த அன்னையர் முன்னணி மற்றும் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க பிரதிநிதிகளை படங்களில் காணலாம். (படங்கள்:அலுவலக படப்பிடிப்பாளர்)

# கல்முனைக்குடியில் மாணவன் நேற்று கத்தியால் குத்திக் கொலை

கல்முனை,ஓக11

சாய்ந்தமருது மல்ஹர் - ஸம்ஸ் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன் அப்துல் மஜீத் அஜ்மீர் (வயது 18) இனந்தெரியாத நபர் ஒருவரின் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமானார்.

இந்தப் படுகொலைச் சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கல் முனைக்குடி கடற்கரைப் பள்ளி வாசல் சாஹுல் ஹமீது நாகூர் ஆண்டகை தர்ஹாவின் பக்கீர் பாவாக்களின் ஐங்கோண மேடைக்கு அருகில் இடம்பெற்றது. கடந்த 12 நாள்களாக நடைபெற்ற கொடியேற்ற விழாவில் நேற்று இறுதிநாள்.

நேற்று அதிகாலை சுபஹ் நேரம் வரை பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டிருந்தனர். மாளிகைக்காடு கிராமத்தைச் சேர்ந்த இம்மாணவன் தனிப்பட்ட குரோதம் காரணமாகவே கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. கல்முனைப் பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டைக்காடு மாதா ஆலயத்தில் 12 ஆண்டுகளின் பின்னர் திருவிழா

கொழும்புத்துறை,ஓக.11

கட்டைக்காடு கம்பலேந்தி மாதா ஆலயத் திருவிழா 12ஆண்டுகளின் பின்னர் இம்மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. 1990 ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவ நடவடிக்கைகளால் இவ்வாலயம் முற்றாக சேதமடைந்திருந்தது. தற்போது தற்காலிக கொட்டகை அமைத்தே திருவிழா கொண்டாடப்படவிருப்பதாக பங்குத்தந்தை ஜே.பிரான்சிஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு வனாந்தரமாக உள்ள இப்பிரதேசத்தில் அனைத்து குடியிருப்புகளும் அழிந்து காணப்படுகின்றன.

தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடுகளிலேயே மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி வசித்து வருகின்றனர்.

இவ்வாலயத்தில் கடந்த புதன் கிழமை கொடியேற்றத்துடன் நவநாள் ஆராதனைகள் ஆரம்பமாகின. எதிர்வரும் 14 ஆம் திகதி மாலை நற்கருணை விழாவும் 15ஆம் திகதி காலை திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும் எனவும் பங்குத்தந்தை தெரிவித்துள்ளார்.

(ஒ-30)

# மு.காவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் அதில் இணைய பாடுபடுவேன்

## ஹக்கீம் முன்னிலையில் நூர்தீன் மசூர் உறுதி

கொழும்பு,ஓக.11

சமாதானப் பேச்சு முன்னெடுக்கப்படும் இக்காலகட்டத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கரங்களைப் பலப்படுத்த முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் அதில் இணையப் பாடுபடுவேன்

வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் நேற்று அமைச்சர் ரவூப் ஹக்கீமின் முன்னிலையில் இவ்வாறு உறுதியளித்தார். மதவாச்சி, இக்கிரிகொல்லாவ மீராமுகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று மதவாச்சி, வவுனியா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற பல வைபவங்களில் கலந்துகொண்டார். ரிஷாத் பதியுத்தீன் எம்.பி., முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் ஆகியோருடன் அமைச்சர் நூர்தீன் மசூரும் அவற்றில் கலந்துகொண்டார்.

மதவாச்சி, சாலம்பைக்குளத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் அமைச்சர் நூர்தீன் மசூர் உரையாற்றினார்.

கட்சியின் நலனைக் கருத்திற் கொண்டும் முஸ்லிம்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவும் மீண்டும் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டேன் என்று அவர் இக்கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.

# படையினரால் பாதிப்படைந்தோர் விவரம் திரட்டு

யாழ்ப்பாணம்,ஓக.11

யாழ்.மாவட்டத்தில் படையினரால் கைதுசெய்யப்பட்டு, தாக்குதலுக்குள்ளாகிப் பாதிப்படைந்தோர் மற்றும் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்புவோர் ஆகியோரின் விவரங் களைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் திரட்டிவருகின்றது.

மீளக்குடியமரும் நோக்குடன் இந்தியாவிலிருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவோர் மற்றும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுத் தாக்குதலுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளோர் ஆகியோர் பல்வேறு இடர்பாடுகளை அனுபவித்து வருகின்றனர்.

இந்த மக்களின் துயர்துடைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டே இந்தத் தகவல் திரட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-6-12)

# தேசிய எழுச்சிப் பேரவை மாநாடு பளையில் நேற்று நடைபெற்றது

## 3000 பேர் வரையில் கலந்துகொண்டனர்

கிளிநொச்சி,ஓக.11

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்டத்துக்கான பேராளர் மாநாடு நேற்று பளை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட கிராமிய, பிரதேச, கோட்ட, மாவட்ட மட்டங்களைச் சேர்ந்த தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள், ஆலோசகர்கள், பேராளர்கள் என சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளா சு.ப.தமிழ்ச்செல்வன், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, தமிழீழ மகளிர் அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் தமிழவிழி, யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் அரசியல்துறைப் பிரமுகர்கள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

காலை 11 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தளபதி கேணல் தீபன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றினார்.

நிகழ்வுகள் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெற்றன.

சுவதேச இந்துமத குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த மனோகரக் குருக்கள், யாழ்மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு டேவிட் அடிகளார், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை விரிவுரையாளர் சகாயசீலன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

தமிழீழ மகளிர். அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் தமிழ்விழி சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்புக் கருத்துரை வழங்கினார்.

இன்றைய அரசியல் நிலைவரங்கள், அதன் பின்னணி மற்றும் இடைக்கால நிர்வாகத் திட்டவரைவு என்பன பற்றியும் தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடுகள் எவ்வாறாக அமைய வேண்டும் என்பது குறித்தும் தமிழ்ச்செல்வன் தனது நீண்ட உரையில் விளக்கிக் கூறினார்.

தொடர்ந்து ஒவ்வொரு கோட்டங்களைச் சேர்ந்தவர்களாலும் குடாநாட்டில் இனங்காணப்பட்ட தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தீர்மானங்களாக முன்வைக்கப்பட்டன.

'கடல் சூழ் நெருக்கடிகளும் ஏற்படும் பாதிப்புக்களும்' என்ற தலைப்பில் தீவகக்கோட்டமும் -

'இராணுவ நெருக்குவாரமும் மீள் குடியேற்ற நெருக்கடியும்' என்ற தலைப்பில் தென்மராட்சிக் கோட்டமும் -

'கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் வடமராட்சிக் கோட்டமும் -

'இயல்பு வாழ்க்கையும் மீள்குடியமர்வும் உயர்பாதுகாப்பு வலயமும் அதன் பாதிப்பும்' என்ற தலைப்பில் வலிகாமம் கோட்டமும் -

'இடைக்கால நிர்வாக அரசு உடன் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவேண்டும்' என்ற தலைப்பில் யாழ். நல்லூர்க் கோட்டமும் - தமது தீர்மானங்களை முன்வைத்தன. குடாநாட்டில் கல்வி நிலைமை மற்றும் கலாசார சீரழிவுகள் போன்ற விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டு தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டன.

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சிதம்பரநாதன், மா.க.ஈழவேந்தன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

"நீங்கள் இவ்வளவு பேரும் இன்றிலிருந்து உங்களது ஊர்களில் எமது பிரச்சினைகள் குறித்து விளக்கி உரிய முறையில் உங்களின் கடமைகளை நிறைவேற்றுவீர்களானால் விரைவில் நாம் எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் நிம்மதியான, சுதந்திரமான வாழ்வை அடைய முடியும்" - என்று கலாநிதி சிதம்பரநாதன் உரையாற்றியபோது அங்கிருந்த அனைவரும் எழுந்து நின்று கைகளை உயர்த்தி அதனை ஆமோதித்தனர்.

இறுதியாக யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிறைவுரையாற்றினார். (ம-4)

# சென்னை சீரணி அரங்கம் இரவோடிரவாகத் தகர்ப்பு!

## ஜெயலலிதாவின் ஜோதிட நம்பிக்கை காரணமாம்

சென்னை,ஓக.11

தமிழகத்தின் பிரபலமான மெரீனா கடற்கரையின் குறியீடாக விளங்கிய சீரணி அரங்கு நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக தகர்த்து தரைமட்டமாக்கப்பட்டது. தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜோதிடம் மற்றும் வாஸ்து சாஸ்திரம் போன்றவற்றின் மீது வைத்துள்ள அதீத நம்பிக்கையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினமிரவு 11.45 மணிக்கு திடீரென்று 'புல்டோசர்கள்' சகிதம் மெரீனா கடற்கரைக்கு வந்த சென்னை மாநகர சபை அதிகாரிகள் சீரணி அரங்கத்தை இடித்துத் தகர்த்தனர். அதன் அத்திவாரத்தையும் கிளறிஎடுத்தனர்.

இந்த வேளையில் கடற்கரைப் பகுதியில் ஏராளமான பொலீஸார் குவிக்கப்பட்டனர். சீரணி அரங்கு இடிக்கப்படுவதைப் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க முற்பட்ட செய்தியாளர்களை பொலீஸார் விரட்டியடித்தனர்.

• அரங்கத்தின் இடிபாடுகளை - சிறு கல்லைக்கூட விடாது மாநகர சபை அதிகாரிகள் லொறிகளில் ஏற்றிச் சென்றனர்.

1970ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சீரணி அரங்கம் கட்டப்பட்டது. சுமார் 15 அடி உயரமான மேடையும் அதன் இரு புறங்களிலும் படிகளும் உள்ளதாக சீரணி அரங்கு அமைக்கப்பட்டது. அத்துடன் ஒப்பனை அறைகளும் அரங்கில் அமைக்கப்பட்டன.

இந்த அரங்கத்தில் பொதுக் கூட்டங்கள், அரசியல் கட்சிகளின் மாநாடுகள், மதரீதியிலான பிரார்த்தனைக் கூட்டங்கள் போன்றவை நடத்தப்பட்டு வந்தன.

இந்நிலையிலேயே நேற்றுமுன்தினம் இரவு சீரணி அரங்கு இடிக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கு சேதமடைந்த நிலையில் இருந்ததாகவும்-

அங்கு இரவில் சமூகவிரோதச் செயற்பாடுகள் இடம்பெற்றதாகவும் -

அதனாலேயே அது இடிக்கப்பட்டதாகவும் -

தமிழக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இதனை சென்னைச் செய்தியாளர்கள் மறுக்கின்றனர்.

மெரீனா கடற்கரையில் பொலீஸார் இரவு பகலாகக் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதால் அங்கு சமூக விரோதச் செயற்பாடுகள் இடம்பெற வாய்ப்பில்லை என்றும் -

சீரணி அரங்கத்தைப் புனரமைக்க அத்திவாரத்துடன் அதனை அகற்ற வேண்டிய அவசியமில்லை என்றும்

அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஜோதிடர் ஒருவர் கூறிய வாஸ்து சாஸ்திர ஆலோசனைப்படியே சீரணி அரங்கு இடிக்கப்பட்டதாக தமிழகத்தில் செய்திகள் பரவியுள்ளன.

ஜெயலலிதா வீட்டிலிருந்து புறப்பட்டு கடற்கரை நோக்கி வந்து அதன் பின்னரே தமிழக அரசின் சட்டமன்றக் கட்டடத்துக்கு செல்வார். இந்தப் பாதையில் ஜெயலலிதா வரும்போது அவரது கார் கடற்கரையில் வைக்கப்பட்டிருந்த கண்ணகி சிலையையே எதிர்நோக்கிவரவேண்டும். இந்நிலையில் பல மாதங்களின் முன்னர் அந்தக் கண்ணகி சிலை லொறி ஒன்றால் மோதப்பட்டதாகக் கூறி திடீரென்று இரவோடு இரவாக அகற்றப்பட்டது. பின்னர் சட்டசபைக்குப் புதிய கட்டடம் ஒன்றை கட்டுவதற்காகக் கடற்கரை வீதியில் உள்ள ராணிமேரிக் கல்லூரியை இடிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்தது. ஆனால், மேற்படி கல்லூரி மாணவிகளின் எதிர்ப்பையடுத்து அத்திட்டம் கைவிடப்பட்டது. இந்த இருசம்பவங்களும் தமிழகத்தில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியிருந்[illegible]

[illegible]சமயத்தில் சீரணி அரங்கம் இடிக்கப்பட்டுள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாகத் தமிழகச் செய்தியாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது முதல்வர், ஆட்சியில் நீடிப்பதற்கு சென்னையில் எவரும் உயிருடன் இருக்கக்கூடாது என்று எவராவது ஒரு ஜோதிடர் அவருக்குக் கூறிவிடாமலிருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்" என்று தெரிவித்தார்.



உலகின் முதலாவது விண்வெளித் திருமணத்தில் இணைய உள்ளவர்கள் இவர்கள்தான். ரஷ்ய விண்வெளி வீரர் கேணல் யூரி மலன்சென்கோ (வயது 41) அமெரிக்காவின் ஹ"ஸ்டன் நகரில் வசிக்கும் ரஷ்யப் பெண்ணான யெகட்டரினா எடமிட்ரி யேவா (வயது26) என்பவரை திருமணம் செய்யவுள்ளார்.

திருமணத்தின் போது மணமகன் மலன்சென்கோ விண்வெளியில் உள்ள ஆய்வு நிலையத்தில் இருப்பார் மணமகள் யெகட்டரினா தரையில் நாஸா தளத்தில் இருப்பார். வீடியோ தொடர்பாடல் மூலமாக இவர்களது திருமணச் சடங்கு நடத்திவைக்கப்படும்.

# லைபீரிய அதிபரின் பிரியாவிடை



மொன்றோவியா,ஓக.11

கிளர்ச்சியாளர்களினால் கட்டாயமாகப் பதவி விலகும் லைபீரிய ஜனாதிபதி ரெய்லர் பிரியாவிடை உரை நிகழ்த்தினார். "என்னைப் பதவியிலிருந்து நிர்ப்பந்தமாக விரட்டுவது ஜனநாயகத்தை கேவலப்படுத்தும் செயல், எனினும் லைபீரிய மக்களுக்காக பதவி விலகுகிறேன்" என்று அவர் அறிவித்தார்.

மேலும் சர்வதேச சமாதான திட்டத்தை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ள ரெயிலர், திங்களன்று பதவி விலகி நாட்டிலிருந்து வெளியேறவுள்ளார். ஆனால், எப்பொழுது அவர் நாட்டைவிட்டு வெளியேறுவார் என்பது அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை சண்டைகள் நடைபெற்றவண்ணமுள்ளன. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் மனிதாபிமான உதவிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அமெரிக்க, ஜப்பான், தென்கொரிய அதிகாரிகள் வாஷிங்ரனில் சந்திப்பு

வாஷிங்ரன்,ஓக.11

வடகொரியாவுடனான ஆறு தரப்புப் பேச்சுக்கள் தொடர்பாக அமெரிக்க, ஜப்பான், தென்கொரிய அதிகாரிகள் அடுத்த வாரமளவில் வாஷிங்ரனில் சந்திப்பர் என்று உயர்மட்ட வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றது.

வடகொரியா அணு ஆயுதத் திட்டத்தை கைவிடச் செய்வது சம்பந்தமாக ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளும் பேசவுள்ளன.

வடகொரியாவை அமெரிக்கா தாக்கும் [illegible]த்திட்டம் எதுவும் இல்லை என்று அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொலின் பவல் கடந்த வியாழனன்று தெரிவித்துள்ளார். ஆறு தரப்புப் பேச்சுக்கள் நடத்துவதற்கு வழிவகுக்கும் முன் நடவடிக்கையாக கொலின் பவல் இவ்வாறு கூறியிருப்பார் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, சந்திப்புக்கான நாள், நேரம் என்பவற்றை முடிவு செய்வதில் சீன உதவி வெளியுறவு அமைச்சர் வடகொரியாவுடன் கலந்துரையாடி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# பெப்சி, கோக் குளிர்பானங்கள் இரண்டாவது கட்ட ஆய்வில்!

புனே,ஓக.11

இந்தியாவில் விற்பனையாகும் பெப்சி, கோக் உட்பட 12 குளிர்பானங்களில் பூச்சிக்கொல்லி மருந்துக் கலவை இருப்பதாக டில்லி அறிவியல் கழகம் தகவல் வெளியிட்டது.

இதனால், இந்தியா முழுவதும் பெப்சி, கொக்கா கோலா குளிர்பானங்களுக்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

இந்த குளிர்பானங்களுக்கு தடை விதிக்கவேண்டும் என்று பல சமூக அமைப்புகளும், வியாபார நிறுவனங்களும் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுத்தன.

இந்தக் ஆய்வு அறிக்கை தவறானது என்றும் உலகத் தரம்வாய்ந்த குளிர்பானங்களையே நாங்கள் தயாரிக்கிறோம் என்றும் - இதை நாங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் நிரூபிக்கத் தயார் என்றும் - கொக்கா கோலா நிறுவனம் அறிவித்தது.

இதைத் தொடர்ந்து சென்னை, மும்பை, கொல்கத்தா, டில்லி ஆகிய நகரங்களில் இருந்து பெப்சி, கோக் உட்பட 12வகை குளிர்பானங்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு மைசூரில் உள்ள மத்திய உணவு பண்ட ஆய்வு நிலையத்துக்கு 2ஆவது கட்ட பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை அடிப்படையில் குளிர்பானங்கள் மீதான நடவடிக்கையை மத்திய அரசு அறிவிக்கும்.

இந்நிலையில், மத்திய உணவு பதப்படுத்தல் துறை இணையமைச்சர் என்.டி.சண்முகம், புனே நகரில் உணவு பதப்படுத்தல் தொழில் கருத்தரங்கில் கலந்துகொண்டார். அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

மைசூரில் உள்ள மத்திய உணவு பண்ட ஆய்வு நிலையத்துக்கு அனுப்பி உள்ள குளிர்பானங்களின் இந்த 2ஆவது கட்ட சோதனையின் அறிக்கை அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் குளிர்பானங்களில் பூச்சிக்கொல்லி நச்சு படிவு இருப்பது நிரூபணமானால் இந்த குளிர்பானங்களுக்கு அகில இந்திய அளவில் தடை விதிக்கப்படும்.

இந்தக் குளிர்பானங்களை தயாரிக்கும் நிறுவனங்களின் அனுமதியும் ரத்துச் செய்யப்படும். இந்த 2ஆவது கட்ட பரிசோதனை அறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும். அனுமதி ரத்துசெய்யப்படும்போது இந்த குளிர்பானங்கள் விற்பதற்கும் தடை விதிக்கப்படும். பூச்சிக்கொல்லி மருந்து படிவங்களால் புற்றுநோய், மலட்டுத்தன்மை போன்றவை வரும். சுகாதாரத்துறை இதை மிகக் கடுமையாகக் கருதுகிறது.

சர்க்கைக்குரிய குளிர்பானங்களுக்கு நாடாளுமன்றத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. நல்ல குடிதண்ணீர் எது என்பதற்கு மத்திய அரசு இதுவரை எந்த ஒரு சரியான இலக்கும் நிர்ணயிக்கவில்லை. ஐரோப்பிய நாடுகளில் உள்ள விதிமுறைகளைத் தான் நாமும் கடைப்பிடித்து வருகிறோம்.

நம்நாட்டுக்கு ஏற்ற விதிமுறைகளை சுகாதாரம், சட்டம், உணவு பதப்படுத்தல் ஆகிய துறைகளின் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து விரிவான அறிக்கை தயாரிக்கப்படும்.

- இவ்வாறு மத்திய அமைச்சர் என்.டி. சண்முகம் கூறினார்.

# பாகிஸ்தானுக்குள் நுழைவதற்கு இந்திய எம்.பிக்கு அனுமதி மறுப்பு

வாகா,ஓக.11

பாகிஸ்தானுக்குச் சென்ற இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் இடம்பெற்ற ரஷீத் ஆல்வி எம்.பி. சரியான விஸா அனுமதி இலலாததால் வாகா எல்லையில் திருப்பி அனுப்பப்பட்டார்.

வாகா எல்லையில் இந்திய அதிகாரிகள் அவரது கடவுச்சீட்டை சோதித்தனர். அதில் சில குறைகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினர். மேலும் அவர் பாகிஸ்தான் செல்ல விஸா அனுமதியும் இல்லை.

எனினும், தான் பாகிஸ்தான் செல்வேன் என்று அவர் அடம்பிடித்ததால், எல்லையைத் தாண்டிச் செல்ல இந்திய அதிகாரிகள் அனுமதித்தனர். ஆனால், சற்று தூரத்தில் இருந்த பாகிஸ்தான் அதிகாரிகள், ரஷீத் ஆல்வியின் ஆவணங்கள் சரியாக இல்லாததால் அவரை இந்தியப் பகுதிக்குத் திருப்பி அனுப்பினர்.

(ஓ)

# பாதுகாப்பு உத்தரவாதம் கோரி ஆப்கான் பெண்கள் ஆர்ப்பாட்டம்

ஆப்கானிஸ்தானில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி வலியுறுத்தி ஏராளமான பெண்களும் சிறுவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காபூலில் உள்ள பெண்கள் பூங்காவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. சுற்றிலும் உயரமான மதிலால் சூழப்பட்ட இந்தப் பூங்காவிற்குள் பெண்களும், சிறுவர்களும் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

இங்கு நேற்றுக்காலை ஆயிரக்கணக்கில் திரண்ட பெண்களும், சிறுவர்களும் ஆப்கானில் தனிமனிதப் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைநகர் காபூல் தவிர்ந்த பிற இடங்களில் ஆயுதக் குழுக்களால் பெண்களும், சிறுவர்களும் பெரும் துன்பங்களை எதிர்கொள்வதாகவும்-

ஆகவே, அக்குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டுமென்றும் - ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் வலியுறுத்தினர்.

காபூல் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் மட்டுமே வெளிநாட்டுப் படையினரும் அவர்களால் பயிற்சியளிக்கப்பட்ட ஆப்கான் தேசிய இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுகின்றனர்.

ஆனால், ஆப்கானின் மற்றைய பகுதிகள் ஆயுதம் தாங்கிய இனக்குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. அப்பகுதிகளில் பெண்களும், சிறுவர்களும் பாலியல் வல்லுறவு உட்பட பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

(ஓ)

COMPUTER COURSES

New Batches Start on Batch 1 :16.08.2003 Batch 2 :18.08.2003 At 10.00 A.M

Diploma in Computer Programming

Diploma in Java Programming

Diploma in Visual C Programming

Diploma in Visual Basic Programming

Diploma in Information Technology



கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க

IIS

நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

Diploma in Internet Technology

Diploma in MS Office

Diploma in Eng. Drawing & AutoCAD

Diploma in Hardware Technology

Diploma in Desk Top Publishing

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )

Head Office: IIS, 100, Clock Tower Road, Jaffna

T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk

Branch: IIS, Nelliyady, Karaveddy

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மல்லாகம் சந்தியில் இருந்து சுமார் 200யார் தூரத்தில் காங்கேசன் துறை வீதி அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சேச் லேன், மாதா கோயில் அருகில், மல்லாகம்.(சி-29364)

கலர் மீன்கள், மீன் தொட்டிக்குரிய அழகு சாதனப் பொருள்கள், மோட்டர்கள், Love Birds கூடுகள், புதிய வடிவமைப்பிலான மீன்தொட்டிகள், பூச்சாடிகள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (21252)

சொந்தப் பாவனையிலுள்ள ரவுண் AC Toyota வான் 51 - சகல ஆவணங்களுடனும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: தொலைபேசி இல. 0777 - 734339. (21232)

போட்டோ கொப்பி இயந்திரம் Cannon 1215, றோணியோ இயந்திரம் Cannon 1215 என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: த.றோகன்ராஜ், C/o த.தர்மஜெயசூரியர், அரச வீதி, உரும்பிராய் கிழக்கு. (21254)

## வீடு விற்பனைக்கு

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் 3 பரப்புக் காணியில் கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.பரராஜசிங்கம், இல.65, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.(21280)

## காணி விற்பனைக்கு

ஏழாலை மேற்கு, புன்னாலைக் கட்டுவன் றோட் அருகில் 9 பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: யோகன். 222 6097 (21278)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Broiler குஞ்சுகள் விலை 45/-, சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை 15/-, 18.08.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். 18.08.2003 பேட்டுக் குஞ்சுக்கு பதிவுசெய்தவர்கள் உடனடியாக எங்களைச் சந்திக்கவும். தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21198)

## புத்தகங்கள்

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்களை நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்னால் அமைந்துள்ள சிறீலங்கா புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். 1. யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுதி, 2. நாடகம் எழுதுவது எப்படி?, 3. யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50/- (21249)

## தவறிவிட்டது

இணுவில் கிழக்கைச் சேர்ந்த சிதம்பரேஸ்வரன் யோகநாதன் என்பவருடைய ஆ.பதிவு அ. இல. (742284085V) இணுவில் சந்திக்கும் நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மற்றா பேணிச்சர், இல. 233(395) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். ஒப்படைத்து உதவவும். (212669)

புன்னாலைக்கட்டுவன், ஈவினையைச் சேர்ந்த வைரமுத்து சந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.592864738V), வி.அ.அட்டை என்பன தவறிவிட்டன. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (21282)

## சிரமதானம் மூலம் மைதானம் துப்புரவு

சாவகச்சேரி,ஒக.11

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலைய விளையாட்டு மைதானம் கடந்த வாரம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது.

இந்த சிரமதானப் பணியில் இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-31)

## French மொழி வகுப்பு

தமிழ்மூல விளக்கத்துடன் எழுத, பேச, வாசிக்க உட்பட

புதிய பிரிவு ஆரம்பம்:
12.08.2003 காலை 10 மணி.
(ஆரம்ப திகதியன்று வரவும்)
By: இந்திரகுமார் CAP

**New College of Higher Studies**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P.: (01) 505642
(சி-29416) (24-11-16)

---

# வேலையாள்கள் தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. ஊக்கமாக வேலை செய்பவர்களுக்கு நல்ல சம்பளம் வழங்கப்படும். தங்கியிருத்தல் வேண்டும்.

தொடர்பு:

**K.தனபாலசிங்கம்**
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு)
19,முருகேசர் ஒழுங்கை,
முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(21284) (26-24-11-16)

---

# பணியாளர் வெற்றிடம்

நீண்டகாலமாக கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டுவரும் அமைப்பில் கீழ்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

1. கணக்காளர்: எச்.என்.டி.ஏ. (H.N.D.A.) அல்லது சமமான தராதரம்
2. பொறியியலாளர்: பீ.எஸ்.சீ. சிவில் [B.Sc. (Eng.)Civil] அல்லது சமமான தராதரம்
3. தச்சுத்தொழிலாளிகள்: (Carpenters)
4. மேசன்மார்: முன்அனுபவத்துடன்
5. தச்சுவேலை, மேசன்வேலை பயிலுநர்களும் விண்ணப்பிக்கலாம்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு சுயவிவரப் படிவத்துடனும் முன்அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடனும் 25.08.2003 ஆம் திகதிக்கு முன்பாக கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**ஆளணி முகாமையாளர்**
எஸ்.எம்.எஸ். எஞ்சினியர்ஸ்
24/3, குமார வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C/29425) (26-11-16-24)

---

# மனோதத்துவ வைத்தியம்

## (GENERAL PSYCHO THERAPY)

யாழ்ப்பாணத்தில் 12.08.2003 - 17.08.2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரை குறைவு இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.

உடனே என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம்.

தொடர்புகொள்ளவும்:

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P. ஆறுமுகம் S.M.P.**
A.S.N: சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt.Regd.No.9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-29388) (24-11-16)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 - 01 - 1935



மறைவு 01 - 08 - 2001

## இளையவி மருதலிங்கம்

திதி: சதுர்த்தசி (11.08.2003)

இரத்தப்புற்றுநோய், உன் இரத்தத்தைக் குடித்து
ஈராண்டுகள் ஆனதுவோ
இந் நானிலத்தில் நாம் வாழும்வரை மறப்பதற்கு மனம் வருமோ!

அம்மன் கோயில் வீதி,
நாவற்குழி கிழக்கு,
கைதடி. (21271) (26-24-11-16)

உம்பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்**
(மகன் - சந்திரசேகரன்).

---

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 23 - 07 - 1978



விண்ணில் 14 - 05 - 2003

## அமரர் கிருஷ்ணபிள்ளை சுரேந்திரன்

(நோந்தன்)

(யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் சிறப்பு இறுதியாண்டு மாணவன்)

எங்கள் செல்வமே! இனிய உள்ளமே!
மங்கா மாண்புடன் வாழ்ந்திட்ட மன்னவா
கல்வியில் உயர்ந்தாய்! பல்கலை சென்றாய்!
விளையாட்டில் மாவீரனாய் மிளிர்ந்தாய்!
ஆடலும் பாடலும் உன்கூடவே பிறந்தவை
அன்பினைச் சொரிந்தாய்! எம் உளங்களில் நிறைந்தாய்!
என்றுமே நீங்கா இடத்தினைப் பிடித்தாய்!
எல்லோரையும் நீ எப்படி மறந்தாய்?
உன்னையே நம்பிய மனைவியும் மைந்தனும்
கண்ணீரில் வாடிக் கலங்குவதைப் பாராய்!
அம்மாவும் உறவும் சுற்றமும் நட்பும்
எல்லாமே கண்ணீர் மழையினில் வாட
எங்கு நீ சென்றாய்? எமது சின்னவா?
காலனவன் கண்ணில் எப்படிப் பட்டாயப்பா?
எத்தனை காலம் சென்றாலும் -
எப்படித் தீர்ப்போம் எமது துயரெல்லாம்?
வழியேதுமின்றி வாடுகிறோம் நின்று
உன் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது இல்லத்தில் இன்று (11.08.2003) திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ள 90 ஆவது நாள் நினைவு ஆத்மசாந்திப் பிரார்த்தனை, அந்தியேட்டிக்கிரியைகள் மற்றும் நண்பகல் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள், அனுதாபிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்திரன் அம்மன் கோயிலடி,
துன்னாலை, கரவெட்டி. (21063) (25-24-11-16)

- குடும்பத்தினர்.

---

# நீங்காத நினைவில் 90 ஆம் நாள்



அமரர் கிருஸ்ணபிள்ளை சுரேந்திரன்
(விஞ்ஞானபீடம் பௌதிகவியல் சிறப்பு, யாழ். பல்கலைக்கழகம்)

மண்ணில் 23.07.1978 — விண்ணில் 14.05.2003

## ஆறாது உங்கள் நினைவு

நெஞ்சமெல்லாம் நிறைந்து விட்ட இதயதெய்வமே!
வஞ்சனை இல்லா வாழ்வளித்த மானிட விழுமியமே
சொல்லுக்குள் சொல்லை சுருக்கி வைத்த சோதிமயமே
சொல்லொணாச் சுடர் ஒளியே –செல்லமே!

ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தும் – அப்பா
என்றழைக்க –''அப்பா'' இல்லையே
விழிகசிந்து நாமிருக்க விண்நோக்கி போனதேன்?
பதை பதைத்து நாம் கதற பார்க்காமல் போனதேன்?

உங்கள் ஆறாத துயரினை சுமந்து நின்று
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி சு. சுகந்தினி
(பலாலி ஆசிரியர் கலாசாலை).
மகன் அருணன்.
(21171) (11-19)

**உதயன்**

# போருக்கு உருவேற்றும் ஜே.வி.பியின் போக்கு!

தற்போதைய சமாதான முயற்சிகளை முறியடிக்க அணி திரளுமாறு அறைகூவல் விடுத்திருக்கிறது ஜே.வி.பி.

இதற்கான பிரசாரங்கள் தென்னிலங்கைளில் மூலைமுடுக்கெல்லாம் வீடு வீடாக மேற்கொள்ளப் படுகின்றன.

புலிகளுடன் பேச்சுமூலம் அல்ல; யுத்தம் மூலமே தாவு என்று ஒற்றைக் காலில் நிறகின்றது அக்கட்சி. அதனுடன் ஏனைய பேரினவாத அமைப்புகளான சிஹல உறுமய மற்றும் சில பௌத்த நிறுவனங்கள் அணி சேர்ந்திருக்கின்றன.

சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் ரணிலின் அரசை தோற்றகடிப்பது இந்தச் சிங்களத் தீவிர வாதிகளின் முதல் திட்டம்.

சரி, ரணிலின் அரசைத் தோற்கடித்து, தற்போதைய சமாதான முயற்சிகளைக் குழப்பிய பின்னர் அடுத்த நடவடிக்கை என்ன?

யுத்தம் ஒன்றே அதன் பின்னர் எஞ்சியிருக்கக் கூடிய ஒரே தீர்வு.

யுத்தத்தில் புலிகளைத் தோற்கடித்து நாட்டின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பேணிக்காக்கலாம் என்று கனவு காண்கின்றது ஜே.வி.பி. ஆனால், கள நிலைமை - யதார்த்தச் சூழ்நிலை - அதுவல்ல. இராணுவ ஆய்வாளர் ஒருவர் வெளியிட்டிருக்கும் புள்ளிவிவரங்கள் அதனை அப்பட்டமாகத் தெளிவுபடுத்தப்போதுமானவை.

யுத்த காலத்திலேயே அரச படைகளுக்குத் தேவையான ஆள்களைத் திரட்ட முடியவில்லை. அதைவிட பல்லாயிரக்கணக்கானோர் படைகளை வட்டு சொலலக கொளளாமல ஓடடம படிககனறனா.

யுத்தம் நிறுத்தப்பட்டுள்ள தற்போதைய சமாதான வேளையிலும் படைக்கு ஆள்கள் சேர்கின்றார்கள் இல்லை. யுத்த காலத்தைவிட சமாதானக் காலத்தில் படைக்கு ஆள்சேரும் வீதம் குறைவு. அதே போன்று படையைவிட்டு ஓடுவோர் எண்ணிக்கையும் யுத்த காலத்தைவிட தற்போதைய சமாதான காலத்தில் அதிகம்.

படைகளில் பணியாற்றுவோரின் சம்பளத்தை அதிகரித்து - அதன்மூலம் அந்தச் சேவைக்கு ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தி - ஆள்களைக் கவர்ந்திழுக்கலாம் என்றால், அதற்கும் அரசு சம்மதிப்பதாக இல்லை. இது தொடர்பாக முப்படைத்தளபதிகளும் கடந்த மாதம் கூட்டாக முன்வைத்த கோரிக்கையை நிதி வசதி இல்லை என்று காரணம் காட்டி, கை விரித்து, நிராகரித்துவிட்டது திறைசேரி.

இப்படி யுத்தம் புரிவதற்கு ஆள்களைத் திரட்டுவதற்கே அரசும் படைகளும் 'தாளம்' போட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில்தான் யுத்தத்துக்கு சங்கு ஊதுகின்றது ஜே.வி.பி.

'உள்ளதையும் கெடுத்தானாம் நொள்ளைக் கண்ணன்' என்பதுபோல இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் தீர்வுகாண கிடைத்திருக்கும் இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தையும் போட்டு உடைக்கும் நடவடிக்கையில் ஜே.வி.பி. ஈடுபடுவது வேதனைக்குரியது.

சமாதான முயற்சிகளில் ஏற்படும் பின்னடைவு, சம்பந்தப்பட்ட தரப்புகளை இராணுவப் போக்குக்குத் திசை திருப்பும் என்பது யாவருக்கும் தெரிந்த உண்மை.

பேச்சு மூலமான - அமைதி வழியிலான - சமரச முயற்சிகளில் தற்போது ஏற்பட்டிருக்கும் இடைநிறுத்தம் - நீண்டகாலத் தேக்கநிலை - இருதரப்பையுமே இராணுவ நகர்வுப் பக்கத்தை நோக்கி அதிகம் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது.

இந்தப் பின்னணியில், போருக்கு 'உருவேற்றும்' பிரசாரச் செயற்பாடுகள் தென்னிலங்கையில் தீவிரமடைந்துவரும் அமைதியை விரும்பும் அனைவரையும் கவலை கொள்ள வைத்துள்ளது.

குறிப்பாக, தமிழ் மக்களை - நீண்ட கால யுத்தத்தால் அதிகம் இன்னல்களை அனுபவித்த வடக்கு - கிழக்கு மக்களை - வேதனையிலும், அசசத்திலும், பீதி நிலையிலும் ஆழ்த்தும் செயற்பாடு இது.

மீண்டும் யுத்தம் வெடித்தால் அது மீண்டு வர முடியாத ஆபத்து நிலைக்கு நாட்டை இட்டுச் சென்று விடும். அத்தோடு கசப்புக்களை மறந்து, பரஸ்பரம் நம்பிகை வைத்து, அமைதி வழியில் தீர்வு காண்பதற்கு எதிர்காலத்தில் இருக்கக்கூடிய மிச்சசொச்ச வாய்ப்பையும் அத்தகைய யுத்தம் துடைத்தெறிந்து விடும்.

அது மட்டுமல்ல, இதுவரை இலங்கை கண்டிராத பேரழிவுப் போராகவும் அது உருவெடுக்கும். யுத்தத்துக்கு உருவேற்றுவோர் அதன் விளைவுகளை ஒருகணம் சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

# அடுத்த வருட சீருடை விநியோகத்துக்கு கல்வி அமைச்சு ரூ. 75 கோடி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக.11

அடுத்த வருடம் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப் படவுள்ள இலவச சீருடைகளுக்காக 75 கோடி ரூபாவை அமைச்சரவை ஒதுக்கீடு செய்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பெரும் செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இத்திட்டம் வெற்றிகரமாக அமையவும், சீருடைகள் சீராக விநியோகிக்கப் படவும் இதனுடன் சம்பந்தப்பட்ட சகலரது ஒத்துழைப்பையும் பாடசாலை கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.சிறிசேனா கோரியுள்ளார்.

சீருடை விநியோகச் செயற்பாடுகளில் பொதுமக்களுக்கு கடந்த காலங்களில் ஏற்பட்டதுபோன்று பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படாது பார்த்துக்கொள்வதோடு, அரசாங்கத்தின் சொத்தைக் கையாளும்போது அதற்குரிய நிதிப்பிரமாணங்கள் ஏனைய சட்டதிட்டங்கள் என்பனவற்றை சரிவரக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் - அவர் வலியுறுத்திக்கூறியுள்ளார்.

2004ஆம் ஆண்டுக்கான சீருடை விநியோகம் தொடர்பான செயற்பாடுகள் பற்றிப் பிரதேச செயலர்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அவர் அறிவித்துள்ளார்.

இலவச சீருடைகளைப் பெறவிரும்பும் மாணவர்களது பெற்றோர் அதற்குரிய விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து வகுப்பாசிரியர், பாடசாலை அதிபர் போன்றோரின் சிபார்சினைப் பெற்று, தத்தம் பகுதிக் கிராமசேவை அலுவலரிடம் இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்கவேண்டும்.

கிராம சேவையாளர்கள் தாம் பெற்ற விண்ணப்பங்களைப் பட்டியல்படுத்துவதோடு, அவற்றைப் பெற்றதற்கான பற்றுச் சீட்டையும் வழங்குவார்கள். தாம் மேற்கொண்ட பட்டியலை செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன் பிரதேச செயலரிடம் ஒப்படைக்க பிரதேச செயலர் தமது பிரிவுக்குத் தேவையான மொத்த சீருடைகளின் எண்ணிக்கையை பாடசாலை கல்வி அமைச்சு, மாவட்ட செயலர் ஆகியோருக்கு செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவேண்டும்.

பிரதேச செயலகங்கள் கோரும் சீருடைகள் சலுசல நிறுவனம் மூலம் அனுப்பிவைக்கப்பட பிரதேச செயலர் கிராம சேவையாளர் மூலம் அவற்றைப் பெற்றோருக்கு வழங்குவார்.

கிராம சேவையாளர்களின் இப்பணிகளுக்காக விநியோகிக் கப்படும் ஒரு பொதிக்கு ஒரு ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கவும், எழுது பொருள்கள் தேவைகளுக்கென ஒரு தொகைப் பணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்.எம்.சிறிசேன அறிவித்துள்ளார். (எ-152)

## 3 மீனவர் சங்கங்களுக்கு சுழற்சி முறைக் கடன்

கொழும்புத்துறை,ஒக.11

வடமராட்சி கிழக்கு, தாளையடிப் பிரதேசத்தில் 3மீனவர் சங்கங்களுக்கு தலா [illegible] ஆயிரம் ரூபாவை சுழற்சி முறைக் கடனாக கியூடெச் [illegible]னம் வழங்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு கப்பலேந்தி மாதா மீனவர் சங்கம், வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் சங்கம், உடுத்துறை கடற்றொழிலாளர் சங்கம் என்பவற்றுக்கே இக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் கட்டைக்காடு சகோதரப் பகிர்வு வாழ்வு மகளிர் அமைப்பு, வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் மகளிர் அமைப்பு, உடுத்துறை சகோதரப் பகிர்வு அமைப்பு ஆகியவற்றிற்கு தலா 50 ஆயிரம் ரூபாவும், செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலய மகளிர் அமைப்பிற்கு 35ஆயிரம் ரூபாவும் சுழற்சி முறைக்கடனாக வழங்கப்பட்டுள்ளதாகவும் -

கியூடெக் இயக்குநர் சி.ஜி. ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார். (ஓ-30)

## அரசியல் பழிவாங்கல் குறித்து 12 ஆயிரம் முறைப்பாடுகள்

கொழும்பு,ஓக.11

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக அரச ஊழியர்களிடமிருந்து சுமார் 12 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அரச சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக கடந்த ஏழு வருடங்களில் இந்த 12 ஆயிரம் முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது.

அரச சேவையில் உள்ளவர்கள் தெரிவித்துள்ள இந்த முறைப்பாடுகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரச சேவைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அரச சேவைகள் ஆணைக்குழு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பித்துள்ள ஆண்டறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. (ஓ-ரி)

### மட்டுவில் பாடசாலையில்

## 'யுனிசெவ்' உதவியுடன் குடிதண்ணீர் விநியோகம்

சாவகச்சேரி,ஓக.11

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில் 'யுனிசெவ்' அமைப்பின் உதவியுடன் குடிதண்ணீர் விநியோகத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

இத்திட்டத்துக்காக ஒரு லட்சத்து அறுபத்து மூவாயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது -

இந்த நிதியைப் பயன்படுத்தி பாடசாலையின் கிணற்றினைப் புனரமைக்கவும், தண்ணீர்த் தாங்கியை அமைக்கவும், புதிதாகத் தண்ணீர்ப் பம்பி ஒன்றைக் கொள்வனவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன், மலசல கூடமும் செப்பனிடப் படவுள்ளது என்றும் - அதிபர் தெரிவித்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியுடன் மூன்று மாத காலத்துக்குள் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (எ-31)

## ஊனமுற்ற 13 பேருக்கு முச்சக்கர வண்டிகள்

### திருநெல்வேலி லயன்ஸ் கழகம் வழங்கியது

யாழ்ப்பாணம்,ஓக.11

திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினால் வலது குறைந்த 13 பேருக்கு முச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த முச்சக்கர வண்டிகளை கையளிக்கும் வைபவம் கடந்த வெள்ளி அன்று யாழ். நாவலர் மண்டபத்தில் லயன்ஸ் கழகத் தலைவர் என்.ஜெயரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக கனடாவில் இருந்து வருகைதந்த லின் கெயர் லிமிட் உரிமையாளர் எ.வி.செல்வராஜாவும் அவரின் துணைவியார் திருமதி ஜெயந்தி செல்வராஜாவும் கலந்துகொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ கூட்டுறவுப் பொறுப்பாளர் புஷ்பன், தமிழ் புனர்வாழ்வுக் கழக பணிப்பாளர் சு.ஜெயராஜ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லத்திற்கு ஒரு நீர்இறைக்கும் இயந்திரம் வாங்குவதற்கான நன்கொடையாக 30 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது. (எ-4-ரி)

**நாளை**

ஆடி 27
செவ்வாய்க்கிழமை
(12.08.2003)
திதி : பூரணை
முற்பகல் 10.55 வரை
நட்சத்திரம:திருவோணம்
முற்பகல் 8.13 வரை
சுபநேரம்: 10.34 - 12.04
ராகுகாலம்: 3.04 - 4.34
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

விளைவைப் பற்றிக் கவலைப்பட்டு காரியத்தைப் பின்போடுபவர்கள் வாழ்வில் உயர்வது கடினம்.

## உடுவில் கல்விக் கோட்டத்தில் மாணவர் நலன்கருதி திட்டங்கள்

### உடனடியாக நடைமுறைக்கு என அறிவுறுத்து

வலி.தெற்கு,ஓக.11

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி தொடர்பாக பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் உடனடியாக இவை முன்னெடுக்கப்படவுள்ளன என கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்தார்.

ஏற்கனவே கடந்த ஜூலை மாதம் தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வரும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான விசேட பரீட்சை செயற்பாடுகள் வெற்றி பெற்று முன்னேற்றம் அடைந்துள்ளதாகவும் -

மேலும் இரண்டாம் தவணை விடுமுறை காலத்தில் திட்டமிட்ட நேரசூசி அமைப்பின் படி மேலதிக வகுப்புகள் நடத்தவும் பரிகாரக் கற்பித்தல் மேற்கொள்ளவும் மேற்படி கோட்ட அதிபர் சங்கம் தீர்மானித்துள்ளது என்றும் - அவர் கூறினார்.

இவ்வாண்டு ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு தமிழ், கணிதம்,, ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சமயம் ஆகிய பாடங்களில் சனிக்கிழமைகளில் அல்லது மாலை வேளைகளில் பயிற்சிப் பரீட்சைகள் நடத்தவும் -

விடைத்தாள்களை மதிப்பீடு செய்து ஆய்வுகள் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானம்,கணிதம் போன்ற ஆசிரியர்களைக் கொண்டு குடும்பப் பாடசாலை மாணவர்களை இணைத்து விசேட வகுப்புகள் நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார். (எ-152)

## தென்மராட்சி ஆசிரியர்களுக்கு சுகாதாரக் கருத்தரங்கு

தென்மராட்சி,ஓக.11

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினர் தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 'சுகாதாரமும் போஷாக்கும் பற்றிய செயலமர்வினை நடத்தவுள்ளனர்.

செயலமர்வுகள் பின்வரும் எட்டுப் பாடசாலைகளில் எதிர்வரும் 13 ஆம், 14ஆம், 15ஆம் திகதிகளில் நடத்தப்படுமெனவும் -

ஆரம்பக் கல்வி கற்பிற்கும் ஆசிரியர்கள் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பாடசாலையில் சமுகமளிக்குமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, மிருசுவில் அ.த.க. பாடசாலை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம், சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம், மட்டுவில் மகாவித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றில் செயலமர்வுகள் நடைபெறும். (எ-117)

## 'கல்விமாணி' பாடநெறிக்கு விண்ணப்பம் கோரல்

அச்சுவேலி,ஓக.11

தேசிய கல்வி நிறுவகத்தினால் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் 'கல்விமாணி' பட்டப் பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை விண்ணப்பதாரிகள் தேசியகல்வி நிறுவகத்தில் பெற்று விண்ணப்பிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்விமாணி பாடநெறிக்கு விண்ணப்பிக்க வேண்டியது தொடர்பான விவரங்களை வலயக்கல்வி அலுவலகங்களிலும் தேசியகல்வி நிறுவனத்தின் யாழ். பிராந்திய நிலையங்களிலும் பார்வையிடலாம் என யாழ்.இந்துக் கல்லூரி பிராந்திய நிலைய பொறுப்பதிகாரி திருமதி வி.தனலட்சுமி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பதாக இப்பாட நெறிக்கு விண்ணப்பிக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# சுடர் ஒளி
வார மலர்




மக்களுக்கு நம்பிக்கை ஊட்டிய தமிழ்ச்செல்வனின் கிழக்கு விஜயம்

வடக்கின் கலாசாரத் திருவிழாவுக்கு புலம்பெயர்ந்த தமிழர் படையெடுப்பு (வட_புலம்)

பிரபாகரன் தப்பித்துப் போவதில் கரிசனையாக இருந்த எம்.ஜி.ஆர்.

ஜெயின் கதியைத் தீர்மானிக்கும் வடஇந்திய சட்டசபைத் தேர்தல்கள்.

கட்டுக்கடங்காத சட்டவிரோத செயல்களும் கட்டுப்படுத்தமுடியாத பாதுகாப்புத் தரப்புகளும்

அமைதிப்படையைக் கொண்டுவர மறைமுக முயற்சியா?

கிரிமினல் குற்றவாளிகள் போன்று விரல்ரேகை பதிவில் இலங்கையர்.

நெருக்கடிகள் நிறைந்த அடுத்த சுற்றுப் பேச்சுக்கள்.


விலை ரூ 16/=

17-23 ஓகஸ்ட்

(சி29406)(14-16)


# நெஞ்சை விட்டு நீங்காத 4ஆம் ஆண்டு நினைவலைகள்

MUMMIE! YOUR UNEXPECTED LOSS CONTINUES WITH MUCH AND MIGHTY SORROW OF ETERNITY



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 | 28 |
| 09 | 07 |
| 1931 | 1999 |



கம்பர்மலை

## திருமதி சிவகாமி இராமச்சந்திரன் (மம்மி)

**திதி:- 11-08-2003**

**எங்கள் இதயத் தெய்வம்**

**எமது குடும்பத் தலைவி அவர்களின் ஆத்மா சாந்தியடைய நெற்கொழு ஆதி வைரவ சுவாமியை வேண்டி நிற்கும்**

"சிவகோட்டம்"
கம்பர் மலை,
உடுப்பிட்டி வடக்கு.

பாசமிகு
திரு.ம. இராமச்சந்திரன்
(குடும்பத் தலைவன்)
மற்றும் மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

(21213) (11-19)

# கல்விச்சாலைக் காட்சிகள்



திருநெல்வேலி றோ.க.த.பாடசாலையில் ஆசிரியப்பணி புரிந்து அண்மையில் ஓய்வுபெற்ற திருமதி சந்திரமதி சிவானந்தனுக்கான பிரிவுபசார நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. பிரிவுபசாரம் பெறும் திருமதி சந்திரமதி சிவானந்தன் தம்பதியினர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதைப் படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் திருமதி க.கனேசமூர்த்தியும் ஆசிரியர்களும் அருகில் காணப்படுகின்றனர். (எ)



கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையின் புதிய நூலகம் யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கத்தினால் நாடா வெட்டித்திறந்து வைக்கப்படுவதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் தி.கிருஷ்ணகுமார் காணப்படுகின்றார். (எ)



புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலை வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள வருகை தந்த பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியை அதிபர் எஸ்.சண்முகராஜா மாலை அணிவித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம். (எ-173)



கோப்பாய் மகாவித்தியாலயத்தின் கணனிப் பிரிவிற்கு குளிரூட்டி ஒன்றினை மலேசியாவில் வசிக்கும் வித்தியாலயத்தின் பழைய மாணவர் நடராசா இரவீந்திரன் தம்பதிகள் அன்பளிப்புச் செய்துள்ளனர். இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்வில் வித்தியாலய அதிபர் அ.அகிலதாசிடம் குளிரூட்டி கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (எ-180)

## நல்லூர் ஆலயச் சூழலில்

யாழ்ப்பாணம்,ஓக.11

நல்லூர் உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு எஸ்.நாகராசாவின் பாட்டு இடம்பெறும். இதில் பக்க வாத்தியக் கலைஞர்களாக கே.பத்மநாதன் - வயலின், டி.வரதராஜன் - மிருதங்கம், எம்.கஜன் - முகர்சிங் ஆகியோர் பங்கேற்பர்.

★ ★ ★

கொழும்புத்துறை,ஓக.11

நல்லூர்க் கந்தன் உற்சவத்தையொட்டி வடபிரதேச இந்துப் பேரவை நல்லூர் அறுபத்துமூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடர் இன்று மாலை 6.00 மணிக்கு திருமுறை ஓதல், நாட்டில் நிலையான சமாதானம் வேண்டி, இடர்களைப் பதிகம், கோளறு பதிகம் என்பவற்றைத் தொடர்ந்து 'முருகனின் மகிமை' என்னும் பொருளில் சண்முகதாஸ் குணமணி சொற்பொழிவாற்றுவார்.(ஓ-30)

## மதகு பலத்த சேதம்

சாவகச்சேரி,ஓக.11

சாவகச்சேரி தபாலக வீதியில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள மதகு கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பலத்த சேதமடைந்துள்ளது.

இதனால், இந்த வீதியால் பிரயாணம் செய்யும் மாணவர்கள் பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட திணைக்களம் இந்த மதகினைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (எ-31)

## வான் - மினிபஸ் மோதல்

வலி.வடக்கு,ஓக.11

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் மீது அவ்வழியாக வந்த மினிபஸ் மோதியதில் வானில் அமர்ந்திருந்த அதன் சாரதி படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் திருநெல்வேலிச் சந்தியில் இவ்விபத்து இடம்பெற்றது.

புன்னாலைக்கட்டுவனில் இருந்து யாழ். நோக்கி வந்த பயணிகள் மினிபஸ் வீதியின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வானை மோதியமையினால் வான் சுமார் 15 யார் தூரத்துக்கு மேல் பின் தள்ளப்பட்டு மின் கம்பத்துடன் மோதியதாகக் கூறப்படுகிறது.

விபத்து இடம்பெற்ற போது வீதி ஓரத்தில் பொதுமக்கள் அதிகமாக காணப்பட்டபோதிலும் தெய்வாதீனமாக அவர்கள் எவரும் விபத்தில் சிக்கவில்லை. (ஓ-86)

## தென்மராட்சியில் விசேட வகுப்பு

தென்மராட்சி,ஓக.11

யுனிசெவ் நிறுவனத்தின் தென்மராட்சி கல்வி வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 6 வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு தமிழ், கணிதம் ஆகிய பாடங்களின் அடைவு மட்டத்திலான விசேட செயற்றிட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

வாரநாள்களில் பாடசாலை நேரத்தின் பின்னர் இவ்வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த செயற்றிட்டம் தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சி அறிவுறுத்தல்கள் வலயக்கல்வி அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும்-

பங்கேற்கும் மாணவர்களுக்கு கையேடுகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

## பலசரக்குக் கடையில் கதவு பிரித்து திருட்டு!

யாழ்ப்பாணம்,ஓக.11

இரவுவேளை பலசரக்குக் கடை ஒன்றைப் பிரித்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் அண்மையில் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் யாழ்.பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அண்மையில் உள்ள பலசரக்குக் கடை ஒன்றில் இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளது.

கடையின் பின்புறமாக உள்ள கதவினைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச்சென்றுள்ளனர். (எ-180-49)

# நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

ஒன்பதாம் திருவிழா



## ஆறும் அவனுக்கு ஈடில்லை

கல்லை யும்உருக் கிக்கனி ஆக்கிடும்
கந்த வேளின் கருணையை நாடி நாம்
நல்லை வந்தனம் நாயகன் சீர் களை
நாவலித் திடக் கூறித் துயர்க்கடல்
எல்லை யில்அனு காவகை வேண்டினோம்
என்றும் காக்குவன் ஐயம்இ தற்கிலை
அல்லல் இல்லை அழிவில்லை அன்பர்காள்!
ஆறுதற் கவன் சீறடி பற்றுவோம்.

- சொக்கன்.

## நிம்மதிக்கு வழி!

*இராகம் : பிலஹரி* *தாளம் : ஆதி*

*பல்லவி*

*நல்லூரான் இருக்க நமன் பயம் வருமா*
*சொல்லுவீர் முருகா சுகம் பல தருமே (நல்லூ)*

*அநுபல்லவி*

*வல்லவன் கந்தன் வழுத்துவீர் தினமே*
*நல்லவன் குகனே நினைத்திடு மனமே (நல்லூ)*

*சரணம்*

*பக்தர்கள் காவடி பவனியில் வருமே*
*வித்தகர் பஜனை விடிவைத் தருமே*
*முத்தர்கள் யோகம் முழுமதி நிலையே*
*நித்தமும் நினைப்பின் நிம்மதி வாழ்வே(நல்லூ)*

கீழ்க்கரவை செ.வல்லிபுரம்

## வரம் தருவாயா நல்லூரானே!

நல்லூரில் உறைபவனே
நல்லைக் கந்தா எம்முருகா
நாம் படும் இன்னலெல்லாம்
நீங்கிடவே அருள் நல்கிடாயோ

காலமெல்லாம் கலங்குகின்றோம்
கண்ணீருடன் வாழுகின்றோம்
கந்தா உன் கருணையினால்
காத்தருள வேண்டுகின்றோம்.

அகதி நிலை மாறவில்லை
அல்லல் இன்னும் தீரவில்லை
ஆறுமுகா நல்லூர் வேலவா
அருள் பொழிந்தே காத்திடய்யா

சோதனையும் வேதனையும்
சுமந்ததினிப் போதுமய்யா
சொந்த மண்ணில் உரிமையுடன்
சுதந்திரமாய் வாழவாம் தருவாய்

- தங்கத் தமிழன்.

## பேரருள் தாருமையா!

*கானக் கண் ஆயிரம் வேண்டுமையா – உன்*
*கார்மயில் வாகனம் வீதி வருகையிலே!*
*ஞானக்கண் பார்வை எமக்கேது ஐயா – எம்*
*ஊனக் கண்ணுக்கு நல்விருந்து தாருமையா!*

*மாலையிலே மணாளனாய் நீ காட்சி தந்திட*
*மனம் லயித்து கரம் கூப்பி சிரம் தாழ்த்திடும்*
*ஏதிலிகளைக் கடைக்கண் பாருமையா – இந்த*
*ஏம்பலிக்கும் ஏழைகளுக்கு பேரருள் தாருமையா!*

*உள்ளத்தால் உருகி உணர்வோடு பாடுகின்றோம்*
*ஊராம் நல்லூரில் உறைந்துவாழ் முருகையா!*
*ஊழோ விதியோ அல்லற்பட்டுழலுகின்றோம்*
*உமைபாலா எம்வினை அறுத்து அருள்புரிவாய்.*

- சா.இரஞ்சினி
மட்டுவில் வடக்கு

SHARP ஜப்பானியத் தொழில்நுட்பம் இப்பொழுது
be sharp
யாழ்ப்பாணத்தில்



SHARP

உத்தரவாதத்துடன் கூடிய பணத்திற்கேற்ற பெறுமதி.
யாழ் நகரிலேயே அனைத்துச் சாதனங்களுக்குமான உதிரிப்பாகங்களை (Spare Parts) பெற்றுக்கொள்ளலாம்.
நிபுணத்துவம் மிக்கவர்களால் விற்பனைக்குப் பிந்திய சேவைகளை யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

Browns Electronics Live it up

BG Browns Group of Companies

இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

## யாழ்.கூ.சங்கத்துக்கு புதிய நிர்வாகிகள்

கொழும்புத்துறை,ஓக.11

யாழ்.பல நோ.கூ.சங்கத்திற்கு புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கான பொதுச் சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களாக, சொலமன் சூ.சிறில், ச.த. கணநாதன், சபா.தியாகராசா, அ.அலெக்சிஸ், மு.கிருஸ்ணசாமி, மு.ஜெ. சுஜீந்திரன், நி.மகேந்திரராஜா ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள இயக்குநர் சபை அடுத்த மூன்று ஆண்டுகள் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை நிர்வகிக்கும். (ஓ-30-51-173)


வேலை
ஆள் தேவை

மொத்த, சில்லறை வியாபார நிலையத்திற்கு வேலை ஆள்கள் உடன் தேவை.

தொடர்பு:-
விள.இல.1983
மே/பா உதயன்
(சி-29411) (24-14-16)

# தர்மசாஸ்தாவே சரணம்






அனலையம்பதி ஐயனார் ஆலயத்தில் இன்று இரதோற்சவம். அந்தப்பதியில் தயவும் கருணையும் கொண்ட அபயம் அளிக்கவல்ல கைகூப்பி நிற்கும்போது மெய்சிலிர்க்க வைக்கும் பார்த்தசாரதியின் மைந்தன் வில்லாலி வீரன் பூரணை புற்கலா நாயகன் வீரமணிகண்டன் இன்று தேரில் ஆரோகணித்து ஏறிவந்து மங்கள வாத்தியங்கள் முழங்க மக்கள் போடும் சரணகோசம் வானத்தைப்பிளக்க மக்கள் பக்தி வெள்ளத்தில் மிதந்துவந்து அருள்மழை பொழியும் கண்கொள்ளாக்காட்சியைக் காண வாரீர்!

காரைநகர். (21279) (25-24-14-16)

கனகசபை சுந்தரலிங்கம்
*(காரை மணிகண்டன்)*

TVS

# வாடிக்கையாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!



எமது ஸ்தாபனத்திற்கு இந்தியாவிலிருந்தும் கொழும்பிலிருந்தும் TVS மோட்டார்சைக்கிள் கம்பனியின் பிரமுகர்களும் பரிசோதகர்களும் வருகை தர இருப்பதனால்,

எமது வாடிக்கையாளரின் நலன்கருதி 12.08.2003 செவ்வாய்க்கிழமை TVS மோட்டார் சைக்கிள் இலவச பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம் எமது நிறுவனத்தால் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை மைதானத்தில் காலை 9 மணி தொடக்கம் 5 மணிவரை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

ஆகையால் TVS மோட்டார் சைக்கிள் வைத்திருக்கும் அனைவரும் எமது ஸ்தாபனத்தில் இன்று தொடக்கம் அதற்கான பதிவுகள் மேற்கொள்ள இருப்பதனால் உங்கள் பதிவிற்கு முந்துங்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

**TVS LANKA (PVT) LTD. இன்**

அங்கீகாரம் பெற்ற யாழ்.
TVS மோட்டார் சைக்கிள் விற்பனை முகவர்

## ஜோ மோட்டார்ஸ்

163, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 222 2544.

(சி-29428) (22-1-18)

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | சனி |
| செ. | இராசிச் | | சூ. வெ. ▲ |
| | சக்கரம் | | வியா. புதன் |
| சந். | கே. | | |

# இந்த வார இராசி பலன்

## 10-08-2003 - 16-08-2003

### மாற்றம்:

10.08.2003இல் பூராடம் - தனுசு இராசியில் சந்திரன் நிற்கும்.
15.10.2003இல் மேடம் - இராகு, துலாம் - கேது மாறும்.
காலம் கரையும் - வேகம் மாறும் - கருத்துக்கள் தடுமாறும். அரசியலில் அடிக்கடி தடுமாற்றம் ஏற்படும். ஆனால், சமாதான நீண்டபாதை, நெடுந்தூரப் பயணத்தில் மாறிமாறி ஒருவரை ஒருவர் குறைகூறியபடி கால எல்லையைத் தாண்ட முயற்சிப் பார்கள். இந்தியாவில் தீவிரவாதிகள் வன்முறைகளை அதிகரிப் பர். ம்த்திய கிழக்கில் ஈராக்கில் வன்முறை வெடிக்கும். இஸ் ரேல் - பலஸ்தீனத்தில் வன்முறை தொடரும். இந்து சமுத் திரத்தில் காற்றழுத்தம் அதிகரிக்கும் எனக்கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

அச்சுவினி நட்ஷத்திரக்காரர்களுக்கு வாழ்க்கையில் குடும்ப அமைவு சுகம் - குறைந்து காணப்படுகின்றது. இவர்கள் ஒரு கட்டுப்பாடான வாழ்வு நடத்துவார்கள். மோகம் அழைக்கும். நீங்களோ தடுமாறுவீர்கள். காசுவரும். புகழ், பொதுத்தொண்டு, புதிய பிரயாணம் - புத்திரர்களுக்கு புதிய சுபமங்களப் பேச்சுத் தொடரும். நாரிநோ, உஷ்ணபீடைகள் வரும். வியாபாரிகள், தோட்டக்காரர்கள் நன்மை அடைவார்கள். மாணவர்களுக்கு புதிய சித்திகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### இடபம்

நீதிநேர்மைகளை ஒருவரும் விலை கொடுத்து வாங்க முடியாது. தடுமாற்றம் வரும். தொழில்ஸ்தானத்தில் போட்டிகள், சண்டை சச்சரவுகள் கூட சிலருக்கு ஏற்பட இடமுண்டு. கலைத்துறையில் நாட்டம், ரீ.வி., டெக செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவிகள் செய்வார்கள். அதிகமாக தற்பெருமை பேசிக்காலங்களைக் கழிப்பார்கள். பித்தம் அதிகரித்து தலைசுற்றும். நிர்வாகஸ்தர், சந்தை வியாபாரிகள், மாணவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### மிதுனம்

லஞ்சம் வாங்கிச் சேர்த்த பொருளும் பிச்சை எடுத்து சேர்த்த பணமும் - பாவப்பணங்களாகும். இதைப் புரியாது சிலர் - பலரை வேதனைப்படுத்துகின்றார்கள். தொழில்ஸ்தானத்தில் வீண் பெருமை பேசித்திரிவீர்கள். மேலதிகாரிகளுடன் மோதல் ஏற்படலாம். அளவறிந்து பேசவும். அரசியல் பேசி அடக்க ஒரு சிந்தை வந்து போகும். காசுபொருள் செலவுகள் அதிகரிக்கும். வாய்வு அதிகரிக்கும். குருத்தொழில், சாய்ப்பு வியாபாரிகள், புடைவை வியாபாரிகள் அதிக நன்மை அடைவார்கள்.

### கடகம்

எலக்சன் வருமா? எனக் கேடகின்றார்கள். இந்த ஆண்டுக்குள வராது எனச் சொல்ல முடியாது. அரசியலில் திடீர் மாற்றங்கள் வரலாம்! மேலதிகாரிகளின் கண்டிப்பு உங்களைச் சினமடையச் செய்யும். வரவுக்கு மீறிய செலவுகள், இட மாற்றங்கள் ஏற்படும். கெட்டதை நினைத்து ஏன் ஏங்குகிறீர்கள். நண்பர்களால் ஆபத்து வரலாம். கொடுத்ததைக் கேட்க முடியாத நிலை. தெய்வதண்டனை வரும். எதிர்பாலாருடன் நிதானமாக இருக்கவும். வாய்வுத்தொல்லை வரும். மாணவர்களுக்கு சோதனைச் சித்திகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் இது போன்றவர்கள் சிறப்பு அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், வெள்ளி.*

### சிங்கம்

வாழ்ந்து முடித்தவர்கள் (பெற்றோர்கள்) வாழத்துடித்துக் கொண்டிருக்கும் (பிள்ளைகளின்) உள்ளங்களைச் சிலர் புரியாமல் இருக்கின்றார்கள் இதே போன்று தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள் எனச் சிலர் எண்ணுவது தவறாகும். உள்ளத்தில் வெள்ளம் போன்ற உணர்வு உருவங்களைத் தொழில்ஸ்தானத்தில் உருவாக்கத் துடிப்பீர்கள். போலிகள் பொலிந்திருக்கும் பீடங்களில் என்ன முன்னேற்றம். வெறுமையில் ஒரு நிறைவு என்று சிந்திப்பீர்கள். தூரச் செய்தி தேன் போன்று இருக்கும். வரவு அதிகரிக்கும். பிரயாண யோசனைகள் ஏற்படும். கால் சோர்வு, உஷ்ணபீடைகள் கொடுக்கும். வியாபாரிகளுக்கு அதிக வருமானம் வரும். மாணவர்கள் நன்மையடைவார்கள். *அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### கன்னி

இளம் உள்ளங்களுக்கு காதல் என்பது வாழ்வதற்காகத் தானே. சாவதற்கு அல்லவே. இதைப் பெற்றோர்கள் கருத்திற் கொள்ளவேண்டும். காதலிப்பவர்கள் ஏன் பொருத்தம் பார்க்கின்றீர்கள். பொருத்தம் இல்லையென்றால் விடவாபோகிறீர்கள். தொலில் ஸ்தானத்தில் உறுதியுடன் இருந்து செயற்படுங்கள். உங்கள் தொழிலை உறுதியுடன் செய்துவாருங்கள். அதனால், வருமானம் அதிகரிக்கும். பொருளில் நிதானமாக இருக்கவும். சனி பார்வை உண்டு. களவுகள் போகலாம். சட்டத்துறை எட்டிப் பார்க்க இடமுண்டு. வாய்வுத் தொல்லைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

நாம் எமது வாழ்வில் எதை வேண்டாமென நினைக்கின்றோமோ - அது எம்மை நாடி வரும். எது வேண்டுமெனப் புரிகின்றோமோ அது எம்மை விட்டு வெகுதூரம் சென்றுகொண்டிருக்கும். தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் வரும். நண்பர்கள் உதவுவார்கள். தூர தேசச் செய்திகள் வரும். சகோதரங்கள் உதவுவார்கள். பொருள் வரவு சுமாராக இருக்கும். இடமாற்றங்களால் பொருள் இழப்புக்கள் கொடுக்கும். வாய்வுத் தொல்லைகள் கொடுக்கும். சட்டத்துறை, சந்தைத்துறை போன்ற துறைகளைச் சார்ந்தவர்கள் அதிக நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்:* ஞாயிறு, வியாழன், வெள்ளி , சனி.

### விருச்சிகம்

ஒரு பிழை செய்தவரை பல தவறுகள் தொடர்ந்து செய்து கொண்டிருப்பவர்கள் குற்றவாளியாக்கும் காலமாகும். மனிதப் பொறாமைகள் பொல்லாதவை. அதனால், துன்பங்களைச் சிலர் விதைத்துக் கஷ்டப்படுகிறார்கள். உங்கள் தொழில்ஸ்தானத்திலும் இப்படியானவர்கள் உங்களுக்குப் பல துன்பங்களை விதைப்பார்கள். பொறுமையாகவிருந்து செயற்படுங்கள். வரவுக்கு மீறிய செலவுகள் கொடுக்கும். அயலவர்களுடன் அவதானமாகவிருக்கவும். நாரிப்பிடிப்பு கொடுக்கும். மாணவர்கள் நன்மையடைந்தாலும் மனத் திருப்தியிருக்காது. இரும்புத் துறை, வியாபாரத்துறை, மருந்துத் துறை, பாதுகாப்புத் துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, வெள்ளி.*

### தனுசு

நல்லவர்களுக்கு மட்டுமா மக்கள் வோட்டுப் போடுகின்றார்கள். கெட்டவர்களுக்கும் சேர்த்துத்தானே போடுகின்றார்கள். புகழ் மங்குதல், பிடிவாதத் தால் இழப்புவரும். கெட்டவர் சகவாசம் - தூரதேச யோசனை, அடிக்கடி மனப்பயம், அதிகபொருள் செலவு செய்தல், அயலவர்கள் நல்லது சொல்ல மாட்டார்கள். மாணவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். கால் பிடிப்பு, மனக்கவலை, பிள்ளைகளைப்பற்றிய யோசனை வரும். வியாபாரிகள், சட்டத்துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்:* ஞாயிறு, திங்கள், வெள்ளி.

### மகரம்

மனித வாழ்வில் விதியின் பரிணாமம் மிகவும் விசித்திரமானது. அதை அறிந்தவர்கள் ஒரு சிலரே. அறிந்தும் கண்டபடி சொல்லமுடியாது சில கஷ்டங்கள் உள்ளன. படபடப்பு, தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருடன் வாக்குக் கலகம் கொடுக்கும். கொடுத்தபொருள்வராது. பிரச்சினைப்பட இடமுண்டு. மாமன் வழியினர் உதவி செய்வார்கள். மாணவர்களுக்கு மத்திம பலன். இடமாற்றம் காட்டுகின்றது. பிரயாணங்களைத் தவிர்க்கவும். கால் வருத்தம், வயிறு, நெஞ்சு நோ வரலாம். மருந்துத்துறை, பிரயாணத்துறையினர்கள் நன்மையடைவர்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள், வெள்ளி.*

### கும்பம்

எனது பிள்ளை படிக்கிறான் இல்லை. சொல்வழிகேட்கிறானில்லை. எனது புருஷன் தினமும் தலைக்கேறிய வெறியுடன் வந்து தொல்லை கொடுக்கின்றார். கிரகங்கள் என்ன சொல்லுகின்றன. பெற்றோர்கள் தினமும் சிந்திக்கின்ற விடயங்களாகும். கிரகங்களால் பாதிக்கப்படுகிறவர்கள் கோயிலுக்குச் சென்று கிரகசாந்தி செய்யவும். உங்களுடன் வாக்குக் கலகம் கொடுக்கும். தொழில் பீடத்தில் உள்ளவர்களுடன் அன்பாகவிருந்து சமாளியுங்கள். பொருள் கொடுத்துக் குறைகேட்பீர்கள். இடமாற்றங்கள் நல்லதல்ல. மனதில் பயம் வரும். குருத்துறை, அரசியல்துறை, பாதுகாப்புத் துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

### மீனம்

14 வயதிற்கும் 26 வயதிற்கும் இடையிலுள்ள 12 வருடங்கள் வேகமானவை - அது இந்திரிய - சுக்கில பூப்புக் காலமாகும். இக்காலத்தில் காதலால் உந்தப்பட்ட ஆண், பெண் உள்ளங்களை பெற்றோர் - ஆசிரியர்களால் கூடக் கட்டுப்படுத்த முடியாது. அதனால், அன்பு, பாசம் விலகி மோகம் வெல்லுகின்றது. தொழில் ஸ்தானத்தில் இப்படிப் பல பிரச்சினைகள் கொடுக்கும். பொறுமையாக இருக்கவும். திடீர் பிரயாணம் ஒன்று வரலாம். வெளிநாட்டுச் செய்திகள் வரும். நண்பர்கள் உதவுவார்கள். சனி, வாய்வுத் தொல்லைகள் கொடுக்கும். வைத்தியத்துறை, குருத்துறையினர்கள் நன்மையடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# குகஶ்ரீ விருதினைப் பெறும் ஓவியக் கலைஞர் மணியம்



ஈழத்திலும், குடாநாட்டிலும் இன்று தலைசிறந்து விளங்குகின்ற மரபு வழி ஓவியர்கள் பலரும் ஓவியர் மணியத்தின் ஓவியக் கலைக்கூடத்திலிருந்து முகிழ்ந்தெழுந்தவர்கள் தாங்கள் என்று கூறிப் பெருமைப்படுவது வழக்கம்.

ஏறக்குறைய இருதசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் மிகமுக்கியமான இடங்களில் வைக்கப்பட்டிருந்த தத்ரூபமான பிரமாண்டமான திரைப்பட 'கட் அவுட்டுக்கள், பனர்கள்' என்பவற்றை வரைந்த தலைசிறந்த ஓவியக்கலைஞர்களுள் இவரும் ஒருவர்.

யாழ்ப்பாணம், நல்லூரில் 1923 இல் பிறந்த பெரியதம்பி சுப்பிரமணியம் (ஓவியர் மணியம்) யாழ். இந்துக் கல்லூரி, கனகரத்தினம் ம.ம.வி. ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். இளமையில் தான் கொண்டிருந்த ஓவியப்பற்றுக் காரணமாக சுயமாகவே வர்ணச்சேர்ப்புச் செய்து அவற்றைப் பிரயோகிக்க முயற்சிகள் செய்தார். இவரது ஓவியநாட்டமானது கடற்படைப் பணியையும், பின்னர் பொது வேலைப் பகுதியில் மேற்பார்வையாளர் பணியையும் விடுத்து முழுநேர ஓவியராக்கிற்று.

1960களில் இந்தியா சென்று திருராமஜெயம் அவர்களிடம் ஓவியத்துறை சார்ந்த நுட்பங்களைக் கற்று வந்த இவர், தாய்நாட்டில் பல சாதனைகள் படைத்தார். காட்சிகள், திரைப் படக்காட்சிகள், தெய்வ ஓவியங்கள் போன்றவற்றை அழகு ஒளிரும் வண்ணம் வரைந்து வழங்கினார். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை பெரியளவிலான 'போஸ்ரர்' ஒட்டும் முறையையும் 'கட் அவுட்' வைக்கும் முறையையும் முதன் முதலில் இவரே அறிமுகம் செய்தார் என்றால் மிகையில்லை. இவை 80முதல் 100 அடி வரை வானுயர்ந்த சாதனைகளாக வளர்ந்து சென்றன.

இவைமட்டுமன்றி திரைப்பட துறைசார் தொழில்நுட்ப அறிவும், ஆற்றலும் வாய்ந்த இவரின் ஆலோசனையிலேயே யாழ்ப்பாண திரையரங்குகள் சில அமைக்கப்பட்டிருந்தன.

சுமார் 20 ஆண்டுக்கும் அதிகமான ஓவியப்படைப்புக்களை உருவாக்கி தனகுப் பின்னும் ஓவியக்கலையின் தரத்தை நிலைநிறுத்த ஆற்றல் மிக்க சிஷ்யர்கள் பலரைத்தந்து வழிவகை செய்த மணியம் அவர்கள் இன்றும் அயராது உழைத்து வரும் கலைஞராவார்.

**பிரம்மஶ்ரீ சௌ.சசிகுமாரசர்மா**

தாம் சார்ந்துள்ள துறையினூடு தியாக உணர்ச்சியோடும், இனப் பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம் மண்ணுக்காகத் தொண்டாற்றி எமது இளைய தலைமுறைக்கு உதாரண புருஷராக வாழ்ந்துகொண்டிருக்கும் ஆயிரம் பிறை காண்கின்ற ஓவியக் கலைஞர் ஶ்ரீமான் பெரியதம்பி சுப்பிரமணியத்துக்கு இவ்வாண்டுக்குரியதும் மூன்றாவது வருடமாக வழங்கப் படுவதுமான 'குகஶ்ரீ' கௌரவவிருதை வழங்குவதில் நல்லூர் ஶ்ரீ பாலகதிர் காம தேவஸ்தானம் பெருமகிழ்வடைகின்றது.




மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் கழக விஸ்தரிப்புத் தலைவரும் மாவட்ட இணைப்பாளருமான லயன்.எஸ்.எஸ்.தங்கராஜாவுக்கு சர்வதேச லயன்ஸ் கழகத்தினால் விசேட விருது வழங்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் இருந்து சர்வதேச லயன்ஸ் கழகங்களின் தலைவரால் அனுப்பி வைக்கப்பட்ட இவ் விசேட விருதை லயன்ஸ் எஸ்.எஸ். தங்கராஜாவுக்கு மாவட்டம் 306 'பி' உப ஆளுநர் லயன் எஸ்.சிவானந்தம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம். மல்லாகம் - தெல்லிப்பழை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் பாலாம்பிகை ஶ்ரீ பாஸ்கரனும் படத்தில் காணப்படுகின்றார். (ஐ-152)



-தேசியக் கலை இலக்கியப் பேரவை வெளியீடான தில்லைச் சிவனின் 'காவல்வேலி' சிறுகதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம் இது. (ஒ -30)

## சிங்களச் சட்ட மசோதாவை எதிர்த்து

# தமிழரும் முஸ்லிம்களும் நாடாளுமன்றில் இணைந்து வாக்களித்தநிலை இன்று இல்லை!

## பேராசிரியர் சிற்றம்பலம் உரை

வலி.வடக்கு,ஓக.11

1956ஆம் ஆண்டு சிங்களச்சட்ட மசோதாவுக்கு எதிராக தமிழ்ப்பிரதிநிதிகளுடன் முஸ்லிம் பிரதிநிதிகளும் நாடாளுமன்றத்தில் வாக்களித்தனர். ஆனால், இன்று நிலைமை முற்று முழுதாக மாறிவிட்டது.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தலைவரும் வரலாற்றுத் துறைப் பேராசிரியருமான க.சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு நிறுவனத்தினால் நாவலர் கலாசார மண்டபத்தில் சமீபத்தில் நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேராசிரியர் க. சிற்றம்பலம் மேலும் கூறியதாவது:-

இலங்கையைப் பொறுத்த வரையில் ஜனநாயகம் என்பது பெரும்பான்மை இன மக்களுக்கு உரியதாகவே இருந்து வருகின்றது. இதன் கீழ் சிறுபான்மை மக்களிடையே பெரும்பான்மை மக்கள் தங்களுடைய எண்ணங்களைத் திணித்து வருகினறனர்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் எண்ணங்கள், கொள்கைகளைத் தம்மீது திணிக்க முயன்ற வெள்ளையனை "வெள்ளையனே வெளியேறு" என்று கூறி இந்திய மக்கள் போராடி வெளியேற்றினார்கள்.

ஆனால், எம்மைப் பொறுத்த வரையில் அத்தகைய நிலை எமது நாட்டில் ஏற்படவில்லை. பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறை நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து பெரும்பான்மை இனத்தவரினுடையதே ஆட்சி என்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

இலங்கையில் சமாதானம் நிலைத்திருக்காமைக்கான முக்கிய காரணம் அரசியல் கட்சித் தலைவர்களின் ஏமாற்றுவித்தையேயாகும். முதன்முதலில் இலங்கையர் என்ற அடிப்படையில் ஒற்றுமையாக ஓர் அமைப்பை தமிழரான சேர் பொன். அருணாசலம் ஏற்படுத்தினார்.

ஆனால், இரண்டு வருட காலத்தில் அவர் அக்குழுவில் இருந்தும் நீக்கப்பட்டார். இந்நிலைமையில் தமிழர்களுக்கான பிரதிநிதித்துவம் அன்றைய அரசாங்க சபையில் இல்லாது போய்விட்டது. அப்போதே தமிழர்களுக்கென தனி அலகு வேண்டும் என்பது உணரப்பட்டது.

ஐம்பத்தைந்துக்கு நாற்பத்தைந்து என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்குமாக இருந்தால் இந்தியத் தமிழர் பிரஜா உரிமைச் சட்டமோ அன்றி தனிச் சிங்களச் சட்டமோ கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டு இருக்க மாட்டாது.

50வருட காலமாக கிழக்கில் திட்டமிட்ட முறையிலே சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை அரசியல் வாதிகள் மட்டும் மேற்கொள்ளவில்லை. அரச உத்தியோகத்தர்கள் சிங்கள புத்திஜீவிகளும்கூட இச் செயற்பாட்டை நன்கு திட்டமிட்டு மேற்கொண்டுள்ளார்கள்.

ஆனால், குடியேற்ற விடயத்தில் தமிழ்த்தலைவர்கள் போதிய அக்கறை காட்டத் தவறிவிட்டார்கள். இதனாலேயே இன்று கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துக் காணப்படுகிறது. இந்த நிலைமை கிழக்கு மாகாணத்தை கபளிகரம் செய்ய வாய்ப்பாக அமைந்துவிட்டது.

மொழிப்பிரச்சினை சம்பந்தமாக பல மாநாடுகள் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றன. ஒருவர் மீது மற்றவர் மொழியைத் திணிப்பது அடிப்படை மனித உரிமை மீறல் என்றும் கூறப்படுகின்றது. ஆனால், திணிப்பவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பது கேள்வியே.

இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழர் உரிமை பற்றிய சமாதானப் பேச்சுவார்த்தையில் புலிகளுடன் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்.

இதே நேரம் அமைச்சர்கள் புலிகளை அழிப்பதற்காக உலக நாடுகளில் ஆயுதக்கொள்வனவிற்கு சென்றுள்ளார்கள்.

சமாதானத்திற்கு மிகவும் க்ாத்திரமான தலைமை இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும். ஆனால், இன்று தன்னுடைய அதிகாரத்தைப் பேணவும் சுயநலத்திற்காகவும் கட்சி வியாபாரம் நடத்தும் தலைவர்களே எம்மத்தியில் உள்ளார்கள்.

இன்று சமாதானம் பற்றிய கருத்தில் அரசாங்கக்கட்சிக்குள்ளேயே உடன்பாடுகள் அற்ற தன்மை காணப்படுகின்றது. அரசாங்கக்கட்சிக்குள் ஒருமைப்பாடு காணப்பட வேண்டும். நாடாளுமன்ற அரச பிரதிநிதிகள் எத்தனை பேர் மக்கள் மத்தியில் சமாதானத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தப்பாடுபட்டுள்ளார்கள்?

சமாதானத்தின் மீதான விசுவாசம் எங்கள் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டும். அரசைப் பொறுத்த வரையில் சமாதானத்திற்கான விசுவாசம் அன்றும் இருக்கவில்லை; இன்றும் இருக்கவில்லை. இன்றைய காலகட்டம் தமிழ்மக்களுக்கு மிகவும் முக்கியமான காலகட்டமாகும். தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானத்தைக் கொண்டு வருவார்கள் என்று கூறிவிட்டு நாம் சும்மா இருக்க முடியாது.

சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக விடுதலைப்புலிகளுடன் இணைந்து ஒவ்வொரு தமிழ்மகனும் செயற்பட வேண்டிய காலகட்டம் இதுவாகும். படை அதிகாரிகளே எதனையும் தீர்மானிப்பதாக இருந்தால் ஏன் அரசாங்கம் இருக்க வேண்டும்?

பிரதமர்தான் எந்தவொரு முடிவையும் எடுத்துச் செயற்படுத்தும்படி படையினருக்கு கட்டளையிட வேண்டுமே தவிர, படையதிகாரிகள் கூறியதைக் கேட்பதற்கு பிரதமர் வேண்டியதில்லை. எம்மண்ணின் மக்களின் அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினையைத் தீர்மானிப்பதற்கு அடுத்த வீட்டு நம்பியார் போன்ற தரகர்கள் தேவைதானா?

எந்தவொரு முடிவையும் மேற்கொள்ளவோ அந்தத் தீர்மானங்களை எடுக்கவோ அரசினாலோ அன்றி பிரதமரினாலோ முடியாவிட்டால் அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு வெளியேறுவதே சிறந்ததாகும்.

கடந்த 20 வருடகால யுத்தத்தில் நாம் சகல கட்டமைப்புக்களையும் சிதைத்துவிட்டோம். இன்று எம்மிடம் இருந்த ஆற்றல்கள், திறமைகள் கூட மழுங்கடிக்கப்பட்டுள்ளன. ஏ- 9 பாதைசெப்பனிடும் பணி கூட செய்யமுடியாது சிங்களவர்களே இப்பணியையும் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

எம்மீது அரசு எத்தகைய நெருக்கடிகள், சுமைகளை ஏற்படுத்தினாலும்கூட தமிழன் அரசுக்கு அடி பணியப்போவதில்லை. இதே போன்று ஆயுதப் போராட்டத்திற்கு முன்னர் 30 ஆண்டுகள் சாத்வீகப் போராட்டத்தில் தமிழன் ஈடுபட்டான். ஆனால், எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அதற்காக அவன் அன்றும் அடிபணியத் தயாராக இருக்கவில்லை. போராட்டத்தையும் கைவிடவில்லை. தமிழ்த் தேசிய இனம் இம்மண்ணில் வாழ்வதற்கு உரிமைகொண்ட இனம் என்பதை வலியுறுத்தி தொடர் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டே இருந்தான்.

இலங்கையில் காலத்துக்குக் காலம் அரசை அமைத்துக் கொள்ளும் இரு கட்சிகளிடமும் தமிழனுக்கு எந்தவகையான உரிமை களையும் கொடுத்துவிடக்கூடாது என்பதில் ஒற்றுமை காணப்படுகிறது. சமாதானம் என்றால் மனம் திறந்து பேச வேண்டும். நியாயத்திற்குக்கட்டுப் படவேண்டும்.

அரசாங்கம் இன்று சர்வதேச நாடுகளை தனது கைக்குள் போட்டுக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு வரச் செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

அரசும் எதிர்க்கட்சியும் தமிழ் மக்களுடைய பிரச்சினையை சமாதான வழியில் தீர்த்துவைப்பதற்காக இணையவேண்டும். எமது பிரச்சினையில் இன்று அந்நிய சக்திகளும் கூட தமது மூக்குகளை நுழைத்து விட்டுப் பார்த்துக்கொண்டு இருக்கின்றன.

இதற்கும் முகம் கொடுத்து மிகவும் கவனமாக எமது பிரச்சினை கையாளப்படவேண்டும்.

மக்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய பிரச்சினையில் மிகவும் கவனமாகவிருப்பதுடன், விழிப்பாகவும் இருக்கவேண்டும். மக்களைப் பொறுத்தவரையில் இத்தகைய நிலைமை காணப்படவில்லை. இது இயக்கத்தினுடைய பிரச்சினை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என்ற தன்மையிலேயே இருக்கின்றார்கள். இது தவறு. நாங்களும் இதில் பங்காளிகளாக மாறவேண்டும் - என்றார் பேராசிரியர்.

(ஓ-86)


## கண்ணீர் அஞ்சலி

சாந்திகம் நிறுவனத்தின் செயலாளர் ஆகிய

**D.M.சோமசுந்தரம்**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சாந்தியகம்,**
15,கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(21289) (31)

## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோட்டா நிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்தியப் பரம்பரை ஜோதிடர் யாழ். வருகைதந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப்பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத்தடையா? தொழிற்பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப்பிரச்சினையா? தீராதநோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்!
இரண்டாவது தடவையாக விஜயம் செய்துள்ளார்.

**மணிசாமி P.T.R ஈஸ்வரி அம்மா**

*யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி. (பழைய லிங்கர் கூல்பார் அருகில்).*


*இல. 54, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில், பெருமாள் கோயிலடி.)*

பார்வையிடும் நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

(11-18-31) (21286)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 - 04 - 1922 | 12 - 07 - 2003 |



### அமரர் முருகேசு செல்லத்துரை
### (மாம்பழம்)

எமது குடும்பத் தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலமும் தொடர்பு கொண்டு அனுதாபந்தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த நல் உள்ளங்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு -

இன்று (11.08.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*செட்டியார் வளவு,*
*சுன்னாகம்.*

(21288) (32-11-18-31) **-குடும்பத்தினர்.**


**THE ROYAL COLLEGE OF JAFFNA**

O/L வரையான அனுபவ விஞ்ஞான ஆசிரியர் தேவை.

தலைமை ஆசிரியர்:

**விக்னேஸ்வரன் ஆச்சாரி**

426 (302) K.K.S. Rd. JAFFNA.

(24-11-18-31) (21283)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி திருச்செல்வன் புவனேஸ்வரி

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்தவரும் கொழும்பில் தற்காலிகமாக வசித்தவருமாகிய திருமதி திருச்செல்வன் புவனேஸ்வரி நேற்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற டாக்டர் திருச்செல்வனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் நரசிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவபாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியை - கொழும்பு), தர்மவரதன் (U.K), காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு மகேஸ்வரி மற்றும் மகாலட்சுமி (Upcot) , சரஸ்வதி (கனடா), சிவஞானம் (U.K) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவகாமி (உப அதிபர் - யா/இளவாலை மெய்கண்டான் ம.வி), சிவகௌரி (ஆசிரியை, கொழு/ கணபதி வித்தியாலயம்), சிவகுமாரன் (கணக்காளர்- U.K), சிவஅம்பிகை (கனடா), சிவஆனந்தி (ஆஸ்திரேலியா), சிவரூபி (ஆஸ்திரேலியா), சிவஜோதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மபாலா (பொறியியல் அதிகாரி, வ.பி.போ.ச. - காரைநகர் சாலை), அற்புதநாதன் (கொழும்பு), மங்களா (U.K), சிவமூர்த்தி (கனடா), ரவிராஜன் (ஆஸ்திரேலியா), சண்முகதாசன் (ஆஸ்திரேலியா), கணநாதன் (பொபி, DEVI ENTERPRISES-COLOMBO) ஆகியோரின் அன்பு மாமியும், பரமேஸ்வரி (U.K), சங்கரப்பிள்ளை (Upcot), சௌபாக்கியவதி (இளைப்பாறிய ஆசிரியை - கொழும்பு), பாலசுப்பிரமணியம் (M.Sc கனடா), செல்வராணி (U.K) ஆகியோரின் மைத்துனியும் ஜீவாசினி, பீஸ்மன், பிரவீணன், சசீலன், விமலினி, விசாலினி, மாதங்கி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2003) செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு 11/2, 55ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11/2, 55ஆம் ஒழுங்கை,*
*வெள்ளவத்தை.*
*T.P: 364601.*

தகவல்:
பா.தர்மபாலா
(மருமகன்).

(21291) (31-13-12)

### M.T.திருநாவுக்கரசு

(பிரபல வர்த்தகரும். இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் முன்னாள் உரிமையாளரும். கலட்டி எச்சாட்டி மஹாமாரியம்மன் முன்னாள் பஞ்சகர்த்தாவும்)

இல. 201, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட M.T.திருநாவுக்கரசு அவர்கள் 09-08-2003 சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சபாரத்தினம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற தங்கமுத்து, காலஞ்சென்ற M.T.சுப்பிரமணியம் (விமலா ஸ்ரோர்ஸ், கண்டி), காலஞ்சென்ற M.T.பொன்னம்பலம் (பிரபல வர்த்தகர்), காலஞ்சென்ற மனோன்மணி, காலஞ்சென்ற M.T.நடராசா, பராசக்தி (ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற M.T.சோமசுந்தரம் (M.T.S-TRANSPORT JAFFNA-COLOMBO) மற்றும் M.T.தர்மலிங்கம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), M.T.துரையப்பா (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் - கச்சேரி) ஆகியோரின் அருமைச் சகோதரனும் இராஜேந்திரன் (உரிமையாளர்-இராஜேந்திரா ஸ்ரோர்ஸ், ஸ்ரீ ரங்கநாதன் ரேடேர்ஸ் - யாழ்ப்பாணம்), பாலேந்திரன் (கனடா), இந்திரஜோதி, ரவீந்திரன் (கனடா), சந்திரவதனி (கனடா), தவேந்திரன் (கனடா), சுகந்தமலர் (கனடா), வசந்தமலர் (கனடா), ஞானேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி (கொக்குவில்), R.S.நடராசா (R.D.A. முல்லைத்தீவு - கிளிநொச்சி), சிவமலர் (கனடா), மகாலட்சுமி (கனடா), பத்மநாதன் (கனடா), சித்திரா (கனடா), கனகவரதன் (கனடா), சேயோன் (கனடா), டில்ருக்ஸி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபிகன், றஜீவன், சஜித்தன், விதுசா, ஷாமிலா, மனோஜ், பிரசன்னா, பிரசோத், மயூரா, சாஹிரா, சஜன், ஹரிஜன், அஸ்மினா, கோல்ட்டின், அனிதா, டனிதா, ஆதித்தன் ஆகியோரின் பாசமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2003) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 201 பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P. 071 - 2355312.*

தகவல்:
T.இராஜேந்திரன்
(மகன் இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்.
ஸ்ரீ ரங்கநாதன் ரேடஸ் - யாழ்ப்பாணம்.)

(21250) (32-12-17-31)

## வேலையாள்கள் தேவை

தொலைபேசி இயக்குநர்கள், கையடக்கத் தொலைபேசி விற்பனையாளர், கணக்காளர், கணனியில் தட்டச்சு செய்யத் தெரிந்தவர்கள் தேவை. (இருபாலாரும் நேரில் வரவும்).

தொடர்பு: **யாழ். போன் சொப்**
இல.10, நவீன சந்தை மேல்மாடி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**T.P.: 222 3817**
(சி-29412) (24-11-18)

## புற்றுநோய் வைத்திய நிபுணர் வருகை

புற்றுநோய் வைத்திய நிபுணர் **Dr.வாணி** அவர்கள் நாளை 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நாளைமறுதினம் 13ஆம் திகதி புதன்கிழமையும் எமது கிளினிக்குக்கு வருகை தருகின்றார்.

- நிர்வாகி
சம்பந்தர் மொடேன் கிளினிக்
யாழ்ப்பாணம்.
(21287) (24-18-11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**
**முருகேசு இராசையா**

தோற்றம் 02-01-1916 | மறைவு 23-07-2002

**திதி: 11.08.2003**

ஆண்டு ஒன்றாகி விட்டும்
ஆறவில்லை எம் துயரம்
நீண்ட வெகுதூரம் அப்பா
நீங்கள் சென்றுவிட்டாலும்
ஆண்டவனின் இணையடிக்கீழ்
அன்போடமர்ந்திருந்து
தூண்டாமணி விளக்காய்த்
துலங்கி எமைக்காத்திடுங்கள்!

பிரிவால் வருந்தும்:
மனைவி, மகன்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (21224) (26-19-11-24)



உ
குகமயம்

## ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்
## பாராட்டு விழா

காலம்: இன்று (11.08.2003) திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு
இடம்: **நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானம்.**

இவ்வருடம் தேவஸ்தானம் 'குகஸ்ரீ' கௌரவவிருதை
ஓவியக் கலைஞர் பெ.சுப்பிரமணியம் (ஆட்டிஸ்ற் மணியம்)
அவர்களுக்கு வழங்குகிறது

மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம்
வரவேற்புரை: **ஸ்ரீமான் இ.சந்திரகுமார்** *(கிராம உத்தியோகத்தர் - நல்லூர்)*
அறிமுகவுரை: பிரம்மஸ்ரீ **சௌ.சசிகுமாரசர்மா**
அருளுரை: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்**
*(நல்லை ஆதீன குருமகா சன்னிதானம்)*
தலைமையுரை: **ஸ்ரீமதி விஜயலஷ்மி சிவச்சந்திரன்**
*(சிரேஷ்ட விரிவுரையாளர் சமஸ்கிருதத்துறை யாழ். பல்கலைக்கழகம்)*
வாழ்த்துரை: பேராசிரியர் **ப.கோபாலகிருஷ்ண ஐயர்**
*(பீடாதிபதி கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)*
**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**
*(தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)*
பிரதம விருந்தினர் உரை: பேராசிரியர் **செ.சிவஞானசுந்தரம் (Dr. நந்தி)**
விழாநாயகனுக்கு தேவஸ்தானம் சார்பாக பிரதம விருந்தினர் பொன்னாடை போர்த்து, தங்கப்பதக்கம் அணிந்து விருதினை வழங்கிக் கௌரவிப்பார். இதனைத் தொடர்ந்து சபையோர் கௌரவித்தல்.

வாழ்த்துப்பா
சம்வாதீஸ்வரர் - கவிமாமணி
**பிரம்மஸ்ரீ மா.த.ந.வீரமணி ஐயர்**
பாராட்டுரைகள்
**ஸ்ரீமான் சி.வி.கே.சிவஞானம்.**
**ஸ்ரீமான் எஸ்.சண்முகராஜா**
*(வருகை விரிவுரையாளர் சித்திரமும் வடிவமைப்பும் யாழ். பல்கலைக்கழகம்)*
**ஸ்ரீமான் சி.பத்மராஜா**
*(ஆசிரியர் வைத்தீஸ்வரக் கல்லூரி)*
பதிலுரை
**விழாநாயகன்**
நன்றியுரை
**குமாரி ந.கீர்த்தனா**

### தெய்வீக இசையரங்கு

14.08.2003 வியாழக்கிழமை மாலை 7.00 மணியளவில் ஆடிவேல் விழா பிராயச்சித்த அபிஷேகத்தின்போது பக்திப்பாமாலைகள் சூட்டப்படும்.
பாட்டு: நல்லூர் சிவஸ்ரீ சோ.உமாரமணக்குருக்கள்
வயலின்: நாச்சிமார் கோவில் திரு.அ.ஜெயராம்
மிருதங்கம்: நல்லூர் க.கண்ணதாசன்
கெஞ்சிரா: நல்லூர் திரு.இரா.சிவராமன்
தபேலா: வேலணையூர் சதா.வேல்மாறன்
முகர்சிங்: நாச்சிமார் கோவில் திரு.நந்தகுமார்

இதனைத் தொடர்ந்து மாலை 8.00 மணிக்கு தேவஸ்தான சமயப் பொது அறிவுப் போட்டிக்கான பரிசில்களும் தொண்டர்களுக்கான நற்சான்றிதழ்களும் வழங்குபவர்.

**ஸ்ரீமான்.க.கேசவன்**
*(பதில் நீதிவான், சட்டத்தரணி - யாழ்ப்பாணம்)*

- தேவஸ்தானம்.
(C/29424) (25-24-18-11)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 498 |
| திகதி | 08.08.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
**5098186-5113080**

வெற்றி இலக்கங்கள் **11 21 23 26**

லக்கினம்
இடபம்



**ஜக்பொட் பரிசு**
**ரூபா. 2,496,150/-**
**வெல்லப்படவில்லை**

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **3,238,300/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 332,343 | 10 | 3,323,430 |
| 2 இலக்கங்கள் | 30,452 | 20 | 609,040 |
| 1 இல + லக்கினம் | 30,034 | 30 | 901,020 |
| 2 இல + லக்கினம் | 2,856 | 100 | 285,600 |
| 3 இலக்கங்கள் | 829 | 500 | 414,500 |
| 3 இல + லக்கினம் | 74 | 5,000 | 370,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 2,496,150 | - |
| மொத்தம் | 396,592 | - | 6,303,590 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா.6,303,590/-

தொடர் இல. 4114191க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**5104033-1-80**
**5108181-2-91**
**5112301-5-39**
**5103389-4-83**
**5109542-8-77**

PHOENIX O&M

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்





உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3825433 இருந்து
3843402 வரை
சீட்டிழுப்பு இல. 1425
திகதி 09.08.2003

**வெற்றி எண்கள்** **04 25 42 43 53**
போனஸ் எண் **24**

**ஜக்பொட் பரிசு**
**ரூபா.3,289,900/-** வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,289,900/- | 3,289,900/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 107 | 10,000/- | 1,070,000/- |
| 3 | 5,530 | 500/- | 2,765,000/- |
| 2 | 94,961 | 20/- | 1,899,220/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 04ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 115,654 | 10/- | 1,156,540/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.10,480,660/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.1,500,000/-**

தொடர் இல. 2859214க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஆகஸ்ட் 13ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**3835264-4-94**
**3842109-9-12**
**3827944-1-69**
**3837484-4-56**
**3842653-2-93**

PHOENIX O&M



## அல்வாய்-வேவிலந்தை
# அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய
## தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் 11.04.2003



## ஆலய பிரதம குருவின் ஆசி


அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாக விளங்குகின்ற அன்னை வடமராட்சிப் பதியிலே அல்வாய் கிராமத்தில் எழுந்தருளி வீற்றிருந்து அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்றாள். மக்களைக் காத்து இரட்சிக்கும் தாய்வடிவில் ஸ்ரீமுத்துமாரி அம்மன் இன்று தேரேறி வருகின்றாள். அக்காட்சி காணக் கண்கோடி வேண்டும்.

அடியார்கள் அனைவரும் இந்த ஆலயத்தில் ஒன்று கூடி அம்பிகையின் அருட்காட்சி காணத் திரளும பாங்கே அலாதி. அரோஹரா கோஷத்துடன் எல்லாம் வல்ல தாயின் திருத்தேர் வடம்பிடித்திழுத்தால் பாவங்கள் சுக்குநூறாகிவிடும். கதிரவனைக் கண்ட பனிபோல அகன்றோடிவிடும்.

மக்கள் படும் தொல்லைகள் யாவும் இல்லையென்று ஆகிவிடும். இன்றைய தேர்த்திருவிழா நன்னாளில் அம்பிகையின் பேரருளுக்குப் பாத்திரமாகி எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்று எனது பரிபூரண நல்லாசிகளை வழங்கி அமைகின்றேன்.

*"சத்வஜெனா சுகிர்ணோ பவந்து"*

கிரியா துரந்தரர், சத்தியாகம சிரோன்மணி
சிவாகம கிரியாநிதி
**சிவஸ்ரீ சி. சுரேஸ்வரக் குருக்கள்.**



## ஆலய பரிபாலன சபைத் தலைவரின் ஆசி

உலகத்துக்கெல்லாம் தாயாக விளங்குகின்ற லோக மாதாவாகிய அன்னை ஆதிபராசக்தி ஸ்ரீ முத்துமாரியம்மன் மூர்த்தமாக எழுந்தருளி வீற்றிருந்து அருள் புரியும் தலம்தான் அல்வாய் - வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்.

இன்று தேரேறி வந்து அடியார்களுக்கு அருள்புரிய அம்மன் ஆரோகணித்து வருங்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். தம்மை வழிபடும் அடியார்களின் இன்னல்களையும் இடுக்கண்களையும் துன்பங்களையும் துயரங்களையும் போக்குவதற்காக அம்பிகை தேரேறிப் புறப்பட்டுவிட்டாள்.

அசுர குணம் அழிந்து அமைதி தோன்றச் செய்த அம்பாளை இன்று தேரிலே தரிசிக்கும் பாக்கியம் பெற்ற அடியவர்கள் உண்மையில் பாக்கியசாலிகளே!

எல்லாம்வல்ல அன்னையின் தேர்த்திருவிழா நாளில் அவளது பாதாரவிந்தங்களைப் பணிந்து போற்றிப் பாடிப் பரவி அவளின் அருளுக்குப் பாத்திரமாகி பூவுலகில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழவேண்டும் என்று பிரார்த்தித்து ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**தலைவர்**
ஆலய பரிபாலன சபை

## தேரேறி வந்தே திருவருளைத் தாரீர்!

**எல்லாம் வல்ல ஈஸ்வரியே தாயே!**
**எமக்கருள்புரிய ஓடி வருவாய் நீயே!**
**பொல்லா வினைகள் போக்கிடும் தேவி**
**தேரேறி வந்தே திருவருளைத் தாரீர்!**
**பல்லாயிரங் கோடி பக்தர்கள் புடைசூழ**
**பவனி வருந் தாயே முத்துமாரி அம்மா!**
**நல்லாருள்ளமதில் நாடியே வீற்றிருக்கும்**
**அல்வாய்ப்பதி அன்னையே அருள்புரிய வாரீர்!**

**கோலாகலமாகத் தேரேறி வரும் அம்பிகையே**
**அல்வாய்ப் பதியமர்ந்த அன்னையே தாயே**
**காலாலுன் திருக்கோயில் கடிதே வலம் வந்து**
**தோத்தரித்தோம் அம்மா காத்தருள் புரிவீர்**
**ஆலாலமுண்ட நீலகண்டனின் அருட்சக்தியே**
**ஆதிமுத்துமாரியே அம்பிகையே சரணம்**
**வேலாலெறிந்தே எம் வேதனைகள் போக்கிடவே**
**தேரேறி வந்தே திருவருளைத் தாரீர்!**

சிவநெறிக் கலாநிதி
**இராசையா ஸ்ரீதரன்.**

## தேரேறி வருகிறாள் தேவியவள்

*அல்வையம்பதியமர்ந்தருள் வழங்கும்*
*ஆனைமுகனின் அன்புமிகு அன்னையவள்*
*இலந்தையடியில் குடி கொண்டிருக்கும்*
*வேவிலந்தை நாமம் கொண்ட மாரியவள்*
*தேசமக்கள் நலம்பெற தேரேறி வரும்*
*தேடற்கரிய அருள்தர வருகிறாள் முத்துமாரியவள்*
*பரமனைக் கைப்பிடித்து எவ்வுயிர்க்கும்*
*பார்காக்க தேரேறி வருகிறாள் பார்வதியவள்*
*நாகன் ஒருபாதியமர்ந்த பக்தர்களுக்கருள் புரியும்*
*பாராளும் பராசக்தி உமையவள்*
*பட்டருக்கு அருஞ் சொற் கொடுத்து*
*பாமாலையால் புகழ்மாலை தந்த அபிராமியவள்*
*வாடிநிற்கும் நம்தேசமக்கள் யாவர்க்கும்*
*கோடி நலம் தந்தருளும் கோதையவள்*
*தேடிவரும் அன்பர்க்கு அருள் புரிந்து*
*பாடிவரும் அடியாருக்கு பகையறுக்கும்கவியானவள்*
*எம்நாட்டு மக்கள் துயர் துடைக்க வேண்டி*
*தீர்வு தந்தெமக்கு நாட்டைக் காத்திடும்*
*துர்க்கையவள்*
*தேன்குடமாய் அருள் சொரிய இன்று*
*தேரேறி வருகிறாள் தேவியவள்.*

- அல்வையூர் யோகி

## அருளை அள்ளித்தரும் அல்வாய் முத்துமாரி அம்மன்

ஸ்ரீதட்சண கைலாசம் என்று போற்றப்படும் ஈழ்வள மணித்திருநாட்டின் வடதிக்கிலமைந்துள்ளது வடமராட்சி. இவ்வடமராட்சியிலே அல்வை ஊரிலே வேவிலந்தைப்பதியிலே குடிகொண்டு எழுந்தருளி மக்களுக்கெல்லாம் அருளாட்சி செய்கின்றாள் ஸ்ரீமுத்துமாரியம்மை. இம்முத்துமாரியின் அருளாட்சியின் எல்லைக்குள் அகப்படாத வடமராட்சி மக்களே இல்லை எனலாம்.

அல்வாய், வேவிலந்தையில் எழுந்தருளியிருக்கும் முத்துமாரி அம்பாள் ஆலயம் இருநூறு ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுப் பெருமை கொண்டது. நீண்ட காலமாக இப்பகுதி வாழ்மக்கள் தமது குறைதீர்க்கும் தெய்வமாக - நோய்தீர்க்கும் தெய்வமாக - வழிபாடாற்றி வந்துள்ளனர்.

### திருத்தலத் தோற்றம்

அல்வாய்க் கிராமத்தில் சிவநில உடைமையாளர்கள் இருந்திருக்கிறார்கள். இவ்வகையில் வீரமாப்பாணர் அடியிலே வந்த குமாரவேலருக்கு ஒரு மகள் "உடைச்சி" என்று அழைக்கப்பெற்று அவர் வள்ளிநாச்சியென்கிற இயற்பெயர் கொண்டவர். அவர் ஒரு விதவையாகவும் இருந்தார்.

உடைச்சியின் காலத்து கர்ணபரம்பரைக் கதையொன்று எல்லோராலும் பேசப்பட்டது. வசதிபடைத்த விதவையான உடைச்சி, ஆண்டுதோறும் தோணியேறி ஆலவாயில் அமர்ந்திருக்கும் மதுரை மீனாட்சியைத் தரிசிக்கப் போவாராம்.

ஒரு தடவை மதுரைக் கடை வீதியில் அற்புதமான அழகார்ந்த ஓர் அம்மன் விக்கிரகச் சிலையைக் கண்டு அவ்வம்மனை விலை கொடுத்து வாங்கி தான் உடுத்திருந்த வெண்பட்டுச்சேலைக்குள் மறைத்துக்கொண்டு தோணியேறி அல்வாய் வந்தடைந்தார் உடைச்சி. இவர் தனது நாற்சார வீட்டில் புனிதமான இடத்தில் அம்மன் சிலையை வைத்து பூவிட்டு விளக்கேற்றி வழிபட்டு வந்தார்.

சிலமாதங்கள் போக ஒருநாள் அம்மாளே என்று கூறி வணங்கிவிட்டு அம்மை கண்ணுறங்கிய வேளையில் 'வள்ளி கவலைப்படாதே, உங்கட அந்தக் காணியில் வேம்பும் இலந்தையும் பின்னிப்படர்ந்திருக்கிறன்றதே, அதன் கீழ் என்னை வைத்து மாலையில் விளக்கேற்றி வா மற்றதெல்லாம் நான் பார்க்கிறேன்.' கனவுரைத்த அந்த அழகான கிழவியை விழித்ததும் காணவில்லை.

கனவு ஊரெல்லாம் பரவி உடைச்சியின் வீட்டில் ஊரே நிறைந்தது. வேவிலந்தைக் காணியில் கொட்டில் ஒன்று கட்டி அம்மனை வைத்துப் பூசை பண்ணி வருவது என்று தீர்மானமாயிற்று. அதன்படி, முத்துமாரி என்ற திருநாமத்துடன் அந்த வேப்பமரக் கொட்டிலில் லோகமாதா கொலுவிருந்து அருள்பாலிக்கலானாள். அன்றிலிருந்து அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன் என்று அழைக்கப்படுகின்றாள். அன்றிலிருந்து இன்றுவரை பொங்கலிடுவதும் நீர்க்கஞ்சி வார்ப்பதும் நடைபெற்று வருகிறது.

### ஆலய விழாக்கள்

இந்த ஆலயத்தில் தற்போது தைப்பூச விழா, அபிராமிப்பட்டர் விழா, இலட்சார்ச்சனை, மாசிமகம், நாயன்மார் குருபூசை, மணவாளக்கோலத் திருவிழா, ஆடிப்பூரணையைத் தினமாகக் கொண்ட 15 நாள்கள் திருவிழா, ஆடிப் பூரவிழா, நவராத்திரிவிழா, கேதார கௌரி பூசை, தீபாவளி, கந்தசஷ்டி, விநாயக சஷ்டி, திருவெம்பாவைப் பூசை, ஆகியவற்றுடன் ஒவ்வொரு மாதமும் பூரணைப் பூசையும், ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமைப் பூசையும் சிறப்புற விழாக்களாக நடைபெற்றுவருகின்றன.

### தேர்த்திருவிழா

அல்வாய் முத்துமாரி அம்பாளுக்கு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு 25.07.2001 சித்திரத்தேர் வெள்ளோட்டமும் நடைபெற்று 2001ஆம் ஆண்டு மஹோற்சவத்தின்போது சித்திரத்தேரில் அம்பாள் பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலித்துள்ளமை கண்கொள்ளாக் காட்சியாகும். ஆண்டுக்கு ஒரு தடவை ஒவ்வொரு ஆலயத்திலும் எழுந்தருளியுள்ள தெய்வம் தேரேறி வருதல் அத்தெய்வம் அடியார் மீது கொண்டுள்ள கருணையேயாகும். கர்ப்பக் கிரகத்திலுள்ள தெய்வத்தினை சிலவேளைகளில எல்லோராலும் பார்க்கமுடிவதில்லை. ஆனால், தேரேறி வரும் அம்பாளை எல்லோருமே பார்க்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. எமக்கெல்லாம் மேலான தெய்வ அருள் அந்த உயரமான தேரில் நின்று வருவது பொருத்தமானதேயாகும்.

அல்வாய் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு அமைந்த சித்திரத்தேர் அமரர் கலாபூஷணம் ஆறுமுகம் சீவரட்ணம் ஆச்சாரியாரினதும் அவர்களின் மாணவர்களினதும் கைவண்ணத்தில் 34 அடி உயரத்தில் அமைக்கப்பட்டது.

இச்சித்திரத்தேரில் கோயிலின் வரலாறும் அம்பாளின் சிறப்புக்களும் அமைக்கப்பட்டுள்ளமை கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த அம்பாளின் தேர்த்திருவிழாவன்று அடியார்கள் பலரும் தமது நேர்த்திக்கடன்களை நிறைவு செய்து அம்பாளின் அருளை வேண்டி நிற்பர். இத்தேர்த்திருவிழாவன்று அடியார்கள் பல இடங்களில் இருந்து கரகம் எடுப்பதும், தூக்குக் காவடி எடுப்பதும், அங்கப் பிரதட்சனம் செய்வதும் பக்தி வெளிப்பாட்டை வெளிப்படுத்தும் செயற்பாடுகளாக அமைந்துள்ளன.

அல்வாய் ஸ்ரீ முத்துமாரி அம்பாளை வழிபட்டு வாழ்வில் வளம்பெற்றோர் பலராவர். தன்னை நாடி வரும் அடியார்களுக்கு அருள் செய்யும் எண்ணத்துடன் இன்று தேரேறிவரும் நாளில் அவளை உள்ளத்தில் அமர்த்தி இஷ்டசித்திகளைப் பெறுவோமாக.

**ஆ.சிவநாதன் (ஆசிரியர்)**

## அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே!

சிவசக்தி வழிபாடு சைவம் ஒப்புக்கொண்டுள்ள வழிபாட்டு முறையாகும்.

'அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையின் தோற்றிய திதியே ஒடுங்க மலத்து உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்'

இவ்வாறு சிவசக்தி தத்துவத்தை சிவஞானபோதம் என்கின்ற சித்தாந்த நூல் குறிப்பிடும் ஒருபொருள் (உருவம்) அப்பொருளின் உள்ளும் புறமும் நிகழும் செயற்பாடுகளில் அதாவது (எனேஜி) என்று குறிப்பிடும் சக்தி, இரண்டும் ஒன்றே என்று விஞ்ஞானம் விளம்பும். மெய்ஞானமாகிய சமயமோ விஞ்ஞானக்கருத்தை தமக்குள் உள்வாங்கிக் கொண்டு இயல்வதுதான் சைவம்.

அதனாலேதான், பிரிக்கவொண்ணா இறையை - ஆதி அந்தமில்லா இறையை - அர்த்தநாரீஸ்வரராக சைவம் வழிபடுகிறது.

சிவத்துக்கும் சக்திக்கும் நம் நாட்டில் தனித்தனி பலப்பல ஆலயங்கள் இருக்கின்றன.

சக்தியின் தத்துவார்த்தத்தை, ஆற்றலை தன் கவிவன்மையால் உலகுக்குக் காட்டியவர் அபிராமிப்பட்டர் என்கின்ற பக்தர். அன்னாரின் கவிதை வரிகள் மூலம் ஆதிபராசக்தி ஆகிய அன்னை ஐந்தொழில்களையெல்லாம் எவ்வாறு நிகழ்த்துகின்றாள் என்பதையும் அன்னை பல்வேறு தோற்றங்களையும் நாமங்களையும் கொண்டுள்ளாள் என்பதையும் சிறிது பார்ப்போம்.

அவர்,

திரிபுரசுந்தரி, மனோன்மணி, அருந்திய நஞ்சு அமுதமாக்கிய அம்பிகை, பெருந்தனமால் பிள்ளைக்கு நல்கிய அம்மே!
புவனம் பதினான்கையும் பூத்தவளே!
பூத்த வண்ணம் காத்தவளே! பின்கரந்தவளே
ஒன்றுமில்லா வெளியே! வெளிமுதற் பூதங்களாகிய அம்மே.

இவ்வாறு எல்லாம் அம்பிகையை ஏத்துகின்றார் பட்டர். மேலும், ஆதிபராசக்தியாகிய அம்பிகையை நாயகி, நான்முகி, நாராயணி, நளின பஞ்சசாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதிநச்சுவாயகி, மாலினி, வராகி, சூலினி, மாதங்கி எனப் பல்வேறு நாமங்களால் போற்றுகின்றார்.

அன்னை பராசக்தியை வெவ்வேறு நாமங்கள் சூட்டிவழிபடும் வழக்கிலேதான் அல்வை வேவிலந்தையில் கோயில் கொண்டு எழுந்தருளி அருளாட்சி நடக்கும் ஆலயம் அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயம்.

இருநூறு ஆண்டுகளுக்கு. மேற்பட்ட காலமாக வழிபடு தலமாகவிருக்கும் இவ் ஆலயம் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பொதுமக்கள் நிர்வாகத்தில் பல்வேறு திருப்பணிகளைக் கண்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் வடமராட்சிப் பகுதியில் ஜனரஞ்சகமான தலமாகவும் விளங்குகிறது.

பதி - பசு - பாசம் என்ற முப்பொருள் உண்மையை விளக்கும் இந்த ஆலயம், மாயா மலங்களாகிய ஆணவம், கர்மம், மாயை என்கின்ற மலங்களை பரிபக்குவம் செய்யும் தலமாக விளங்குகிறது ; விளங்கவும் வேண்டும்.

இத் திருத்தலத்தில் நடைபெறும் நித்திய, நைமித்திய வருடாந்த மஹோற்சவம் யாவும் அன்னையின் ஐந்தொழில் பற்றிய பாவனையே.

இன்று அம்பிகை சித்திரத் தேர்மிசை இவர்ந்து அடியவர்களுக்கெல்லாம் மலபரிபாவம் செய்வதற்காக உலா வருகின்றாள். சித்திரத் தேரும், தேர் தங்கும் மாளிகையும், தேரோடும் வீதியும் செவ்வனே நிறைவேற அயராது உழைத்த திருப்பணிச் சபை யாவரையும், பரிபாலனத்தாரையும், கலைஞர்களையும், உடலுழைப்பையும் பணத்தினையும் அள்ளிவழங்கியவர்களையும் மேலும் அம்பிகையின் சிறப்புக்கெல்லாம் தம் மெய்வருத்தம் பாராது உழைக்கும் அந்தணனாரும் பிரதம குருக்களுமான சுரேஸ்வரக் குருக்கள் வாயார வாழ்த்தி ஆசியையும் வழங்கிக் கௌரவிக்கிறோம்.

அன்னையின் அருளாசி அனைவருக்குமாகுக!

**சு.கணபதிப்பிள்ளை,**
உப தலைவர்,
திருப்பணிச்சபை.

(C/29426) (14-16)

## மதகு பலத்த சேதம்

சாவகச்சேரி தபாலக வீதியில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள மதகு கடந்த 2000 ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பலத்த சேதமடைந்துள்ளது.

இதனால், இந்த வீதியால் பிரயாணம் செய்யும் மாணவர்கள் பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.(எ-31)

## குரங்கு...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

பொன்றைச் செவிமடுத்தனர்.

வேவு விமானம் தென்பட்டதும் கெரில்லா தளமொன்றிலிருந்து யாரோ ஒருவர், தாக்குதல் நடத்துமாறு சப்தமிட்டிருக்கிறார்.

உடனே கட்டுபாட்டாளர்கள் செயற்படவே, வேவு விமானம் மேலே எழுப்பியது பின்னர் பாதுகாப்பாக தரைக்கு கொண்டு வரப்பட்டது.

- இவ்வாறு அச்செய்தி கூறுகின்றது. (ம)

# யுவதியை மோதி 2 கி.மீ. தூரத்துக்கு இழுத்துக்கொண்டு ஓடிய பஜேரோ!

## எகலியகொடையில் நடந்த பரிதாபச் சம்பவம்

கொழும்பு,ஓக.11

எகலியகொடை நகரில் யுவதி ஒருவரை மோதிய 'பஜேரோ' ஜீப் ஒன்று அந்த யுவதியை சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு இழுத்துச் சென்ற திகில் சம்பவமொன்று சில தினங்களுக்கு முன்னர் நடந்திருக்கிறது. இந்த விபத்தில் கொல்லப்பட்ட யுவதியின் சடலம் பின்னர் பாதையோர ஓடையொன்றிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

கினிகத்தேனையைச் சேர்ந்த பி. வத்சலாதேவி என்னும் யுவதிக்கே இப்பரிதாப கதி ஏற்பட்டது.

எகலியகொடை நகரிலுள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு கடந்த வியாழக்கிழமை நேர்முகப் பரீட்சைக்கு அந்த யுவதி தந்தையுடன் வந்திருக்கிறார். நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட அவர் எதிர்வரும் 12 ஆம் திகதி தொழிலுக்கு வருமாறு கேட்கப்பட்டார்.

அன்று இரவு 9.30 மணியளவில் அந்த யுவதி வீட்டுக்குத் திரும்புவதற்காக தந்தையுடன் வீதியைக் கடந்த போதே அத்திகில் சம்பவம் நடந்தது.

இரத்தினபுரி பகுதியிலிருந்து மிக வேகமாக வந்த ஒரு 'பஜேரோ' ஜீப் யுவதியை மோதியுள்ளது. மோதுண்ட யுவதி 'பஜேரோ'வின் அடியில் சிக்குப்பட 'பஜேரோ'வின் வேகம் குறைந்துள்ளது. ஆயினும் உடனே யுவதியின் சடலத்தை இழுத்தவாறே 'பஜேரோ' பறந்துள்ளது.

இந்தப் பயங்கரத்தை நகரிலிருந்த பலரும் கண்டுள்ளனர். தந்தையோ திகைத்துப் போயிருக்கிறார்.

பொலீஸாருக்கு இவ்விபத்து அறிவிக்கப்படவே, உடனடியாகச் செயற்பட்ட பொலீஸார் அன்று நள்ளிரவே அந்த 'பஜேரோ'வைக் கண்டுபிடித்தனர். சாரதியான வர்த்தகர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்படும் போதும் அவர் குடிவெறியில் இருந்தார் என பொலீஸார் கூறினர்.


## இயந்திர இயக்குநர் பயிலுநர் தேவை (MECHINE MINDERS TRAINEES)

★ ஒருவருட பயிற்சி வழங்கப்படும்
★ பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு
★ பயிற்சி நிறைவில் திறமையானவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

தகுதியானவர்கள் சான்றுப்பத்திரங்களுடன் இன்று மதியபோசனத்திற்கு பின் உதயன் பணிமனைக்கு நேரில் வரவும்.

*361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

மனிதவள முகாமையாளர்
உதயன் பத்திரிகை அலுவலகம்.


## காணவில்லை

திருமதி ஜகன் மோகன் அனிற்றா ரோகினி என்பவரை (இன்றுடன்) 13 நாள்களாகக் காணவில்லை. இவரது சொந்த இடம் கூமாங்குளம், வவுனியா. இவரை உடனடியாக 77, நாவலர் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வந்து சந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*யாழ்ப்பாணம்.* (21299) (32-12-17) தகவல்: கணவர்.


## CIIT - St.Patrick's College Jaffna.

கணனி கற்கை நெறிகள் ஆரம்பம்.

பிரிவு - 1 11.08.2003 திங்கட்கிழமை மாலை 4.00
பிரிவு - 2 16.08.2003 சனிக்கிழமை காலை 9.00

Level - 1 (Grade 1-5) Kits Programme.
Level - 2 (Grade 6-8) Computer Concepts & M.S. Office Programme.
Level - 3 (Grade 9-13) MCSC - International Exam.

(சி-29430)(31-12-17) CIIT - Director.


## இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் திருக்கோவில்

## தீப பூஜை

11-08-2003 திங்கட்கிழமை

மாலை 5.00 மணிக்கு - பூஜை
6.00 மணிக்கு - வசந்த மண்டபப் பூஜை
6.30 மணிக்கு - தீப பூஜை ஆரம்பம்
தொடர்ந்து அம்பாள் வீதியுலாவும் இடம்பெறும்.

ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார் திருக்கோவில்.
இணுவில். (21273) (32-11-18-31)


## பட்டப்படிப்புகள் கல்லூரி

புதிய மாணவர்களை அனுமதித்தல் 2004/2005

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் வெளிநிலைப்பட்டப் பாட நெறிகளான
★ கலைமாணி B.A. ★ வணிகமாணி B.Com.
★ தொழில் நிர்வாகமாணி BBA ★ விஞ்ஞானமாணி B.Sc.

❑ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்திபெற்றவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விவரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூ.10/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ விரிவுரைகள் 07.09.2003 இல் ஆரம்பமாகின்றன!

தொடர்புகளுக்கு:
இயக்குநர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

25 வருடகாலமாக பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ்.நகரில் இதுவே! (21295) (32-12-17-31)


## கிழக்கிற்கென...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

றது. அநேகமாக திருகோணமலையைத் தமது பிரதேச தலைமையகமாகக்கொண்டு இத்தளபதி இயங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கில் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருவதாக இராணுவத தலைமைப்பீடம் கருதியதே, அந்தப் பிரதேசத்துக்கென தனியான - விசேட - தளபதி ஒருவர் நியமிக்கப்படுவதற் குக் காரணம் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கடந்த வெள்ளியன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ள ஏனைய இராணுவ அதிகாரிகளின் இடமாற்ற விவரம் வருமாறு:-

★ மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் - 22ஆவது டிவிஷனின் பொதுக்கட்டளை அதிகாரி.

★ மேஜர் ஜெனரல் சீவிலி வணிகசேகர.இராணுவத் தலைமையகத்தில் பயிற்சிக்குப் பொறுப்பான இயக்குநர் நாயகம்.

★ மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர கொழும்பு நடவடிக்கைக் கட்டளைப்பீடத் தலைவர்.

★ மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி 21ஆவது டிவிஷனின் பொதுக்கட்டளை அதிகாரி.

★ பிரிகேடியர் லோரன்ஸ் பெர்னாணடோ இராணுவத் தலைமையகத் துக்கு.

★ பிரிகேடியர் ஜோன் செனவீர - இராணுவத் தலைமையகத்துக்கு.

★ பிரிகேடியர் என்.விஜேசிங்க - ஓகஸ்ட் 18 முதல் 56ஆவது டிவிஷனின் பொதுக்கட்டளை அதிகாரி.

★ பிரிகேடியர் உபாலி எதிரிசிங்க - ஓகஸ்ட் 18 முதல் இராணுவத் தலைமையகத்துக்கு.

★ பிரிகேடியர் வி.ஆர்.ரில்வா 56 ஆவது டிவிஷனுக்கு.

★ பிரிகேடியர் நிமல் ஜெயசூரிய - தற்போது வகிக்கும் இராணுவ நடவடிக்கை இயக்குநர் பதவிக்கு மேலதிகமாக திட்டமிடல் இயக்குநர் பொறுப்பையும் ஆற்றுவார்.


## காணி விற்பனைக்கு

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு மேற்குப் புறமாகவுள்ள ஒழுங்கையில் குடியிருப்புக்குரிய 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பருத்தித்துறை வீதியிலிருந்து 250 யார் தொலைவிலுள்ளது.

தொடர்புகளுக்கு:
28, கைலாசபிள்ளையார் வீதி,
நல்லூர். (21301) (32-12-17-31)


## தவறிவிட்டது

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் (HALOTRUST) பணிபுரியும் ந.சுதாகரன் என்பவரின் கைத்தொலைபேசி (ALCATAL) 29.07.2003 அன்று நாவலர் வீதிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து HALOTRUST இல் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(21300) (32-12-17-31)

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு மார்க்கண்டு

அத்தாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு மார்க்கண்டு நேற்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, லக்ஸ்மி ஆகியோரின் அன்புக் கணவரும் இரத்தினம், இராசா, பரிபூரணம், துரைராசா, கௌரிதேவி, வரதராஜா, சிவராசா (லண்டன்), மனோகரன், மகாலிங்கம், சாந்தாதேவி மற்றும் காலஞ்சென்ற கனகாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசி, ஜெகதேவி, சிவசம்பு, (கிராம சேவையாளர்), சரோஜினிதேவி, தங்கவேலாயுதம், ஜெனகாம்பிகை, இராஜேஸ்வரி (லண்டன்), தேவி, அருட்செல்வி, தங்கராசா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று காலை 10.30இற்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன்மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அத்தாய், அல்வாய்.* (C/29433) (29-12-17-31) தகவல்: மா.துரைராசா (துரை), (மகன்).

## ஜெயரட்ணம் சந்துரு

கல்வியங்காடு, G.P.S. றோட்டைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட ஜெயரட்ணம் சந்துரு அவர்கள் நேற்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கனடாவில் வசிக்கும் ஜெயரட்ணம் சந்திரலேகா அவர்களின் மூத்த மகனும் கவிதா, சுஜாத்தா, திலக் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சபா, சிவநாதன் ஆகியோரின் மைத்துனரும் கிக்கியின் மருமகனும் கலைச்சோலை சிவபாக்கியத்தினதும் கனடாவில் வசிக்கும் பூபாலன் தங்கரத்தினத்தினதும் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2003) திங்கட்கிழமை காலை அவரின் யாழ். இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 1 மணியளவில் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*G.P.S. றோட், கல்வியங்காடு.* (21292) (32-12-17-31) தகவல்: ஜெயரட்ணம்.

## வேலுப்பிள்ளை பேரம்பலம்

5ஆம் வட்டாரம், ஐயனார் கோவிலடி, அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட வேலுப்பிள்ளை பேரம்பலம் 09.08.2003 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை (கனடா), அமரசிங்கம் (ஜேர்மனி), நடராசா (ஜேர்மனி), இந்திரராணி (அனலைதீவு), இராசநாயகம் (சுவிஸ்), செல்வநாயகம் (ஜேர்மனி), சிறிரங்கநாயகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பமணி (கனடா), மனோன்மணி (ஜேர்மனி), தனலட்சுமி (ஜேர்மனி), குணரட்ணம் (அனலைதீவு), ரஞ்சிதம் (சுவிஸ்), ராசி (ஜேர்மனி), லம்பேட் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அனலைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5 ஆம் வட்டாரம், அனலைதீவு.* (21302) (31-12-17) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## வல்லிபுரம் ஐயம்பிள்ளை (தம்பிராசா)

கலைவாணி வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும் குமரக்கோட்டம், கோண்டாவிலை வசிப்பிடமாகவும்கொண்ட வல்லிபுரம் ஐயம்பிள்ளை நேற்று முன்தினம் (09.08.2003) சனிக்கிழமை காலாமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2003) திங்கட்கிழமை பி.பகல் 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமரக்கோட்டம், கோண்டாவில்.* (21303) (29-12-17) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## திருமதி மேரி யோசப்பின் லில்லி பாக்கியநாதன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி யோசப்பின் லில்லி பாக்கியநாதன் 10.08.2003 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வராஜா பாக்கியநாதன் அவர்களின் அன்பு மனைவியும் சாந்தா - விஜயரட்ணம் (கொழும்பு), லீலா - சுப்பிரமணியம் (கனடா), டாக்டர் ஜெயா - பாக்கியநாதன் (அமெரிக்கா), அன்ரன் யோகராஜா ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் சுப்பிரமணியம் (கனடா), சந்திரா (அமெரிக்கா), குமாரி ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற சேகர், செல்வி கலா (கனடா), நிலா (கனடா), சுதா (கனடா), குமார் (கனடா), மோகன் (கனடா), சுமதி (கனடா), சுதாகரன் (கனடா), பாபு (கொழும்பு), வதனி, றகினி, நளினி (அமெரிக்கா), கவிதா, ஜீவிதா, கஜன், நிஷா, தர்ஷிகா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான பேபி, வஸ்தியாம்பிள்ளை, டெய்சி, கிறேஸ், றோற் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.08.2003) திங்கட்கிழமை பிற்பகல் 4மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்த பின் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*117, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி.* (21304) (32-12-17-31) தகவல்: அன்ரன் (மகன்).

## திருமதி ஆச்சிப்பிள்ளை சந்திரசேகரம்

கரணவாய் தெற்கு, வலவன்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை சந்திரசேகரம் அவர்கள் நேற்று (10.08.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சந்திரசேகரத்தின் அன்பு மனைவியும் குலசிங்கம், சிவக்கொழுந்து, யோகாதேவி, காலஞ்சென்ற இராஜசிங்கம், திலகவதி, விமலம் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2003) திங்கட்கிழமை மாலை 2மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வலவன் தோட்டம், கரணவாய்தெற்கு, கரவெட்டி.* (C/29432) (29-12-17-31) தகவல்: குடும்பத்தினர்.

# யாழ். செயலகம்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

களின் சமாசத்தைச் சேர்ந்த பலரும் அங்கு கூடியிருந்தனர். அவர்கள் அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவும் அவரிடம் மகஜர் ஒன்றைக் கையளிப்பதற்காகவும் அங்கு கூடியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான தகவல் கிடைத்ததைத் தொடர்ந்தே அமைச்சர் செயலகத்துக்கு வருவதைத் தவிர்த்துக் கொண்டார் என்றும் கூறப்பட்டது.

முன்னதாக, கொழும்பில் இருந்து விசேட விமானம் மூலம் அமைச்சரும் பொலீஸ் மா அதிபர் அடங்கிய அவரது குழுவினரும் காலை 9.00 மணியளவில் பலாலியை வந்தடைந்தனர். அங்கிருந்து குருநகர் புனித யாகப்பர் ஆலயத்துக்குச் சென்றனர். அங்கு பூசை வழிபாட்டில் கலந்துகொண்டனர்.

1995ஆம் ஆண்டு விமானக் குண்டு வீச்சால் சேதமடைந்த புனித யாகப்பர் ஆலயத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கென அமைச்சர் ஒரு தொகைப் பணத்தை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்திடம் அங்கு வைத்துக் கையளித்தார்.

அங்கிருந்து யாழ். சிறைச்சாலை மற்றும் யாழ். பொலீஸ் நிலையம் ஆகியவற்றுக்குச் சென்ற அமைச்சர் குழுவினர் அங்குள்ள தேவைகள் பற்றி அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

குருநகர், சிநோர் தொடர்மாடிக் குடியிருப்புப் பகுதி, பாஷையூர் ஆகிய கரையோரப் பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அவதானித்தனர். அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்குச் சென்ற அமைச்சர் கல்லூரிக்கு கணனி ஒன்றை அன்பளிப்புச் செய்தார்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, பண்ணைப் பகுதி, யாழ். பொது நூலகம் ஆகியவற்றுக்கும் சென்ற அமைச்சர் குழுவினர் அங்கு நடைபெற்றுவரும் அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட்டனர்.

நாவாந்துறையில் உள்ள பள்ளிவாசலுக்கும் அமைச்சர் குழுவினர் சென்றனர். முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கேட்டறிந்தனர்.

பின்னர், யாழ். நாகவிகாரைக்குச் சென்ற அமைச்சர் குழுவினர் அங்கு விசேட வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

நல்லை ஆதீனத்திற்கும் அவர்கள் விஜயஞ்செய்துள்ளனர். ஆதீன குருமுதல்வருடன் கலந்துரையாடிய அமைச்சர் ஒரு தொகுதி சமய நூல்களையும் ஆதீனத்துக்கு அன்பளிப்புச்செய்தார்.

இறுதியில், அச்சுவேலி சென். திரேஸா கல்லூரிக்கும் சென்ற அமைச்சர் குழுவினர் அங்கு பாடசாலைக்கு புதிய கணனி ஒன்றையும் அன்பளிப்புச் செய்தனர்.

நேற்று மாலையே அமைச்சரும் அவரது குழுவினரும் கொழும்பு திரும்பினர். (ம-5)

# படைகளை....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இராணுவத்திற்குத் திரட்ட முயற்சிகள் எடுக்கப்படவிருக்கின்றன. இந்த முயற்சி வெற்றிபெற்றால் தொடர்ந்து மேலும் ஐயாயிரம் பேரை (மொத்தம் பத்தாயிரம் பேரை) இராணுவத்திற்குத்திரட்ட நடவடிக்கை எடுக்கும்படி தனது அதிகாரிகளுக்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல உத்தரவிட்டிருக்கின்றார்.

கடந்த காலத்தில் இவ்வாறு இராணுவத்திற்கு ஆள்திரட்ட எடுத்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை என்பதை கடந்த கால புள்ளிவிவரங்கள் தெளிவுபடுத்துகின்றன.

இதேசமயம் கடந்த மூன்று ஆண்டுகளில் படைகளைவிட்டு ஓடித் தலைமறைவானோர் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது. அதன் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 2000 இல் | - 4,972 | பேர் |
| 2001 இல் | - 6,018 | பேர் |
| 2002 இல் | - 7,326 | பேர் |
| 2003 இல் | - 4,337 | பேர் |

(முதல் 5 மாதங்களில்)

இதன்படி அரசு புலிகள் யுத்தத் தவிர்ப்பு நிலை அமுலுக்கு வந்த பின்னர் - சுமார் ஒன்றரை வருட காலத்தில் - பன்னிரண்டாயிரம் பேர் சொல்லிக்கொள்ளாமல் படைகளை விட்டுத் தப்பி ஓடியுள்ளனர்.

படைகளை விட்டுத் தப்பி ஓடியோர் எண்ணிக்கை அதிகரித்திருப்பது போல, அதனால் தென்னிலங்கையில் குற்றச் செயல்களும் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

படையினரின் சம்பளத்தை மறுசீரமைத்து, அவர்களின் வேதனத்தை அதிகரிப்பதன் மூலம், சம்பளக்கவர்ச்சியைக் காட்டி ஆள்களைப் படைக்கு கவர்ந்திழுக்கலாம் என்று முப்படைத் தளபதிகளும் கருதுகின்றனர்.

இது தொடர்பாக அவர்கள் மூவரும் ஒன்று சேர்ந்து - படையினரின் சம்பளத்தை மறுசீரமைக்கக்கோரும் - கூட்டு அறிக்கை ஒன்றை கடந்த மாதம் அரசுக்கு சமர்ப்பித்திருக்கின்றனர். எனினும், அதனைப் பரிசீலனைக்கு எடுக்கும் நிதி நிலையில் அரசு இல்லை என்று தெரிவித்து அந்தக் கோரிக்கையை திறைசேரி நிராகரித்துவிட்டதாக அறியவந்தது.

## புலனாய்வு...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு யாழ். பல்கலைக் கழகத்தில் கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டது. இதனை அடுத்தே அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் விஜயத்தின் போது புலனாய்வுப் பிரிவினர் மிகத் தீவிரமாகச் செயற்பட்டனர்.

அமைச்சருக்கு எதிராக ஏதாவது போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளனவா என்பது பற்றி அறிவதில் நேற்று முன்தினம் பின்னிரவு வரையும் அவர்கள் தீவிரமாக இருந்தனர்.

நேற்று நண்பகலில் யாழ். செயலகத்துக்கு வருவதாக இருந்த அமைச்சரின் திட்டம் இறுதி நேரத்தில் கைவிடப்பட்டதற்கும் புலனாய்வாளர்களின் அறிவுறுத்தலே காரணம் என்றும் கூறப்பட்டது. (ம)

# புலிகள் தரப்பு திருத்த...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அரசியலில் இன்று ஏற்பட வில்லை. அது எப்பொழுது ஏற்படும் என்று நாம் எதிர்வுகூறவும் முடியாது. சிலவேளைகளில் அது வெறும் கனவாகவும் முடியலாம்.

போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு அவர்கள் இழந்த தமது வாழ்வுரிமையை, யுத்தம் நிறுத்தப்பட்ட இந்த இடைக்காலத்திலேயே எங்களால் பெற்றுக்கொள்ள முடிந்தால்தான் இந்த சமாதானம் நீடிக்கும். இதுதான் யதார்த்தம்.

சர்வதேச சமூகம் இதனைப் புரிந்துகொண்டிருக்கின்றது.

எமது மக்கள் இழந்துபோன தமது வாழ்வுரிமையை மீளக் கட்டியெழுப்பிக்கொள்வதற்கான சந்தர்ப்பமாக இந்த இடைக்காலத்தை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதற்காகவே ஓர் இடைக்கால நிர்வாகத்தைத் தலைவர் வலியுறுத்தி இருந்தார்.

இந்த இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொண்டுள்ளது. அதனை இலங்கை அரசுக்கும் அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தி இருக்கின்றது.

அந்த அடிப்படையில்தான் இடைக்கால நிர்வாக வகைப்பாட்டுக்குள் வந்து தற்போது தங்களுடைய பல வரைவுகளை எங்களுக்கு அனுப்பியிருக்கின்றது அரசு. ஆரம்பத்தில் அனுப்பப்பட்ட இரு வரைவுகள் மிக மோசமானவை. அவை நடைமுறைச் சாத்தியமானவை அல்ல.

எமது மக்களுடைய வாழ்வு நிலையைச் சீர்படுத்துவதற்கான எந்த அதிகாரங்களும் இல்லாதவையாக அந்த வரைவுகள் இருந்தன. நாங்கள் அவற்றை நிராகரித்தோம். மூன்றாவது வரைவை அனுப்பினார்கள். அதுவும் பல குறைபாடுகளுடன் இருக்கின்றது. ஆனால், நாங்கள் அதனை உடனடியாக நிராகரிக்கவில்லை.

மூன்றாவது வரைவையும் விடுதலைப் புலிகள் உடனடியாக நிராகரித்து விடுவார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அதனூடாக, "விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை; சமாதானத்துக்கு விரோதமானவர்கள்; அவர்கள் ஒரு போதும் அமைதி வழியில் பேசி பிரச்சினைக்குத் தீர்வுகாணும் மனப்போக்கில் இருக்கவில்லை" என்று சர்வதேச பிரசாரம் ஒன்றைச் செய்யலாம் என அரசு எதிர்பார்த்தது.

ஆனால், நாம் அந்த விடயத்தில் தெளிவாக இருக்கின்றோம். எமது மக்களின் அபிலாஷைகளை - தேவைகளை - உள்ளடக்கிய இடைக்கால ஏற்பாடு தொடர்பான சில ஆலோசனைகளை எமது தலைமைப்பீடத்தின ஆலோசனையின் அடிப்படையில் நாம வரைந்து அவர்களிடம் கையளிக்க இருக்கின்றோம்.

எமது தலைமைப்பீடத்தினால் ஆலோசனைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சர்வதேச சட்ட நிபுணர்கள், சர்வதேச துறைசார் நிபுணர்களை ஒன்றிணைத்து அவர்களுடன் கலந்துரையாடி, அந்த ஆலோசனைகளுக்கு இறுதி வடிவம் கொடுப்போம்.

சர்வதேச சமூகத்துக்கு மீண்டும் ஓர் உண்மையை அடித்துச் சொல்வதற்கும், விளக்குவதற்கும் நாம் தயாராகி உள்ளோம்.

தமிழ்மக்களின் வாழ்வு நிலையை மேம்படுத்துவதற்கு இடைக்காலத்தில் இப்படியான நிர்வாகத்தை தோற்றுவிப்பது தவிர்க்க முடியாதது.

உலகில் ஏற்பட்டுள்ள பிணக்குகளுக்குத் தீர்வுகாணுகின்ற போதெல்லாம் - பேச்சுக்கான சமாதான முன்னெடுப்புக்கள் நடந்த போதெல்லாம் - இடைக்கால ஏற்பாடு; இடைக்கால நிர்வாகம்; இடைக்கால அரசு என்கின்ற கட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த வகையில் பிரச்சினைக்குத் தீர்வுகண்ட பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன.

இலங்கை அரசு அதனை உதாசீனப்படுத்த முடியாது. அப்படி உதாசீனப்படுத்துமாக இருந்தால் தமிழ் மக்கள் தமது வழியில் சென்று தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் சூழ்நிலைக்கு அரசு உடனடியாக - அவர்களுக்கு - வழிவிட வேண்டும்.

எமது இந்த நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் என்பதில் நாம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளோம்.

'விடுதலைப் புலிகள் வன்முறைவாதிகள், பயங்கரவாதிகள், அவர்கள் அமைதி வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எந்த வழியிலும் ஒத்து வராதவர்கள்' என்ற பிரசாரத்தை இலங்கை அரசு சர்வதேச ரீதியாக செய்துவந்தது. இன்று அந்தச் சூழலை மாற்றி அமைக்கும் முனைப்பாக அரசியல் இராஜதந்திர அரங்கிலே எமது தலைவர் காய்களை நகர்த்துகிறார்.

எமது நீதியான, நியாயமான, தர்மப் போராட்டத்தை சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும் - என்றார். (ம-4)

ஒலிபெருக்கி சாதனங்கள் விற்பனைக்கு

SSA 250M - 250W அம்பிளிபயர்
SSB 80EM - 80W அம்பிளிபயர்
AMX 912 - 9 சனல் மிக்ஸ்சர்கள்
HMT 30 - லைன் ரான்ஸ்போமர்கள்
40 WATS யூனிற்றுக்கள்
G.S. 18",24" நீளக்கோண்கள்

அனைத்தும் புதியவை

தொடர்பு:-
'கோபுரம் சவுண்ட்ஸ்'
அவுஜா ஒலிபெருக்கி சாதனங்கள விற்பனையாளா.
M.மயூரன்
மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
(21107) கொக்குவில்.

ரஷ்யாவில் மருத்துவக்கல்வி

SMOLENSK STATE MEDICAL ACADEMY
DOCTOR OF MEDICINE (MD)
MEDICINE :- 1800US $
(anuwally)
6 YEARS (IN ENGLISH)

2003/2004 கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

Admission மற்றும் மேலதிக தகவல்களை விடுமுறையில் இலங்கை வந்துள்ள மருத்துவ மாணவன் மூலம் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

T.SAYANTHAN
672, K.K.S. Road,
Jaffna.
T.P. : 021-222 2536
0777 316273.
e.mail:
Smolenskmedical@hotmail.com

(சி-29351) (31-16-14-17)

நீங்கா நினைவில் மூன்றாம் ஆண்டு

அமரர்

தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)



தோற்றம் 26.06.1941

மறைவு 14.08.2000

ஆண்டுகள் மூன்று ஓடிமறைந்தாலும்
ஆறாது எம் துயரம்
ஓங்கிய நீள் நெடு நினைவாய்
உங்கள் நினைவுகள் நாளும் எம்முடன்....!

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.08.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.